பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 26 செவ்வாய்க்கிழமை 11.07.2023 கதிர் 242

முல்லைத்தீவு நீதிவானுக்கு எதிரான

# சரத் வீரசேகரவின் நாடாளுமன்ற உரை நீதித்துறை சுதந்திரம் மீதான தாக்குதல்

## இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் இது தொடர்பில் ஒரு நிலைப்பாடு எடுக்கவேண்டும் என வலியுறுத்தல்

முல்லைத்தீவுநீதிவான்டி.சரவணராஜாவுக்கு எதிராக பொது ஜன பெரமுனவின் நாடாளு மன்ற உறுப்பினர் சரத் வீரசேகர நாடாளு மன்றில்ஆற்றிய உரைதொடர்பில்இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் ஒரு நிலைப் பாட்டை எடுக்கவேண்டும் என்று வலியுறுத் தியுள்ளார் மூத்த சட்டத்தரணி கே.எஸ். ரட்ணவேல்.

இது தொடர்பில் இலங்கை சட்டத்தர ணிகள் சங்கத் தலைவருக்கு அவரு ஒரு கடிதம் எழுதியுள்ளார். அதில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

நாடாளுமன்றத்தில் அதன் உறுப்பி னர் சரத் வீரசேகர ஜூலை 7 ஆற்றிய வெறுப் புப் பேச்சு, நீதித்துறையின் சுதந்திரத்தின் மீதான தாக்குதல். அத்தோடு முல்லைத்தீவு நீதிவான் டி.சரவணராஜாவை அச்சுறுத் துவது போன்றது என்பதை ☞2

## இது ரகசியம் அல்ல!

தமிழ்அரசுக்கட்சியின்தேசியமாநாட்டுக்கு முன்னர்அந்தக்கட்சிக்குப்புதியதலைவரும் நிர்வாகிகளும்தெரிந்தெடுக்கப்படுவார்கள் என்று அந்தக் கட்சியின் மத்திய குழுக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவு, அது தொடர்பில் கூட்டத்தில் ஏற்பட்ட சலசலப்புக்கள் குறித்து இந்தப் பத்தியில் ஏற்கனவே தெரிவித்திருந்தேன்.

தேசிய மாநாடு எப்போது நடக்கும் என்று இன்னமும் முடிவு செய்யப்படவில்லை. கூட்டத்திற்கு முன்னர் புதிய தலைவர் தெரிவாவார் என்பது சரி, ஆனால், மாநாடு எப்போதுஎன்பதுதான்யாருக்கும்தெரியாது. கலியாணத்துக்கான எல்லா ஏற்பாடுகளும் தயார்ஆனால்மாப்பிள்ளைதான்யார்என்று தெரியாது என்கிற கதையாக இருக்கின்றது தமிழ் அரசுக் கட்சித் தலைவரின் அறிவிப்பு என்றும் கிண்டல் செய்திருந்தேன்.

கூட்டத்தில்இந்தவிடயம்பற்றிமாவையே நேற்றுப் பேச்சைத் தொடக்கினார். தேசிய மாநாடு நடத்தப்படவில்லை என்று கடும் விமர்சனங்கள் வருகின்றன. கட்சிக்குள் இருப்பவர்களே அத்தகைய விமர்சனங்களைச் ☞2

## மண்வெட்டியால் கொத்தி நண்பனைக் கொன்ற நபர்

### வவுனியாவில் கைது: போதையால் விபரீதம்

வவுனியா, கல்மடு - ஈஸ்வரிபுரம் பகுதியில்தனது நண்பனை மண்வெட்டியால் கொத்திப் படுகொலை செய்தார் என்ற குற்றச்சாட்டில் நேற்று அதிகாலை ஒருவர் கைது செய்யப்பட்டார் என்று ஈச்சங்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நண்பர்கள் இருவர் மதுபானம் அருந்திய போது ஏற்பட்ட வாய்த்தர்க்கம் காரணமாகவே இந்தக் கொலை இடம்பெற்றுள்ளத என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வவுனியா, கல்மடு - ஈஸ்வரிபுரத்தைச் சேர்ந்த வேலுசாமி நிஷாந்தன் (வயது 32) என்ற நபரே கொலை செய்யப்பட்டார்..

சனிக்கிழமைஇரவுபோதையின்உச்சத்தில் பழைய தகராறு தொடர்பில் ஏற்பட்ட வாக்குவாதம் காரணமாக சந்தேகநபர் ☞2

## அளம்பிலில் பெருமளவு குண்டுகள் நேற்று மீட்பு



முல்லைத்தீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அளம்பில் வடக்கு பகுதியில் மண்ணில் புதைக் கப்பட்டிருந்த பெரும் எண்ணிக்கையான எறிகுண்டுகள் நேற்று சிறப்பு அதிரடிப் படையினரால் மீட்கப்பட்டன.

நீதிமன்ற அனுமதியுடன் நேற்றுக் காலை இந்த வெடிபொருட்கள் மீட்கப்பட்டன.

இதில் 82எம்.எம். மோட்டார் குண்டு- 49, 60 எம்.எம். மோட்டார் ☞2

நீதிவானுக்கு எதிராக விசம் கக்கிய

## சரத் வீரசேகரவின் கருத்தை கண்டித்து முல்லையில் இன்று காலை போராட்டம்

### மாவட்ட சட்டத்தரணிகள் ஏற்பாடு

குருந்தூர் மலையில் தனது கடமையைச் செய்த முல்லைத்தீவு மாவட்ட நீதி பதியை அவதூறு செய்யும் வகையிலும் அச்சுறுத் தும் வகையிலும் நாடாளு மன்றத்தில்கருத்துத்தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் சரத்வீரசேகரவின்கருத்தைக் கண்டித்து முல்லைத்தீவு மாவட்ட சட்டத்தரணிகள் இன்று காலை போராட்டம் நடத்தவுள்ளனர்.

இது தொடர்பான தீர்மா னம்மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தின்நேற்றையகூட்டத் தில்ஏகமனதாகஎடுக்கப்பட்டது. முற்பகல்10.30மணியளவில் முல்லைத்தீவு நீதிமன்ற முன்றலில் முதற்கட்டமாக அடையாளக் கண்டனப் போராட்டத்தில் ஈடுபடுவது என்று சட்டத்தரணிகள் தீர்மானித்துள்ளனர்.

''இலங்கை சிங்கள பௌத்தநாடுஎன்பதைத்தமிழ் நீதிபதி விளங்கிக்கொள்ள வேண்டும். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ளபௌத்ததொல்பொருள் மரபுரிமைகளுக்கு எதிராகச் சில நீதிபதிகளும் செயற்படுகி றார்கள். குருந்தூர்மலையில் இருந்து எம்மை வெளியேற் றிய முல்லைத்தீவுநீதிமன்ற நீதிபதியின் செயற்பாட்டை ஏற்றுக்கொள்ள முடியாது. தொல்பொருள் தொடர்பில் ஆராயும்அதிகாரம்அவருக்கு இல்லை" என்றுசரத்வீரசேகர ஜூலை 7 நாடாளுமன்றத்தில் உரையாற்றியிருந்தார்.

அது மட்டுமல்லாமல் பௌத்த மரபுரிமைகளைப் பாதுகாக்க சிங்கள மக்கள் ஒன்றிணையவேண்டும் என்றும் அவர் அழைப்பு விடுத்திருந்தார்.

குருந்தூர்மலையில் நீதிமன்ற உத்தரவை மீறி விகாரைக் கட்டுமானங்கள் மேற்கொள்ளப்பட்டன என்கிற முறைப்பாடுதொடர்பில்ஆராய் வதற்காக முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி கடந்த வாரம் அங்கு நேரில் சென்றிருந் தார். அப்போது அங்கு சென்றிருந்தனர் நாடாளு மன்ற உறுப்பினர் சரத் வீரசேகர உள்ளிட்ட ☞2

## மண்ணை விற்று காசு பெறுவதென்றால் ஜனநாயகக் கூட்டணியே தேவையில்லை

### போராளிகள் கட்சித் தலைவர் கடும் சீற்றம்

(ந.லோகதயாளன்)

மண்ணைவிற்றுரெலோ காசுபெறும்என்றால்ஜனநாய கக் கூட்டணியே எமக்குத் தேவையில்லைஎன்றுசீறியி ருக்கிறார்

இவ்வாறு ஜனநாயக தமிழ்த்தேசியகூட்டணியின் இணைத் தலைவர்களில் ஒருவரும்ஜனநாயகப்போரா ளிகள் கட்சியின் தலைவ ருமான கதிர் தெரிவித்தார்.

அன்று நீலன்திருச்செல் வம். செய்தவற்றையேஇன்று செல்வம்அடைக்கலநாதனும் செய்கின்றார். அவர் தமிழ்த் தேசியத்தில் பெரும் பற்றுக் கொண்ட ஆள் இல்லை என்றும் விமர்சித்துள்ளார்.

வவுனியாவில் அமைக் கப்படவுள்ள சீனித் தொழிற் சாலை விடயத்தில் ஜனநா யகக் கூட்டணிப் பங்காளிக் கட்சியான ரெலோவின் தலைவர் செல்வம் அடைக் கலநாதன் மற்றும் கட்சியின் பேச்சாளர் சுரேன் குருசாமி ஆகியோர்தொடர்புபட்டிருப்பது தொடர்பிலேயே கதிர் இந்தக் குற்றச்சாட்டுக்களைச் சுமத் தினார்.

தொலைக்காட்சிநிகழ்ச்சி ஒன்றில்பேசியகதிர்இதனைத் தெரிவித்தார். சீனித் தொழிற் சாலை விவகாரத்தில் ஜனநா யகத் தமிழ்த் தேசியக் கூட்ட ணியில் அங்கம் வகிக்கும் ஜனநாயகப் போராளிகள் கட்சியின் நிலைப்பாடு என்ன என்றுகேட்கப்பட்ட கேள்விக்கு அவர் பதிலளித்தபோது,

செல்வம் அடைக்கலநாதன் சீனித்தொழிற்சாலை மற்றும் கரும்புச் செய்கையை ஒரு சிறிய விடயமாகக் கருதி, அதற்காக யாரும் குத்தி முறிய வேண்டாம் என்கின்றார். தமிழர் விடுதலைக் கூட்ட ணியின் நீலன்திருச்செல்வம் செய்ததையே இவரும் செய்கிறார் - என்றார்.

இது தொடர்பில் கதிர் மேலும் தெரிவித்ததாவது:

நெடுங்கேணியில் கரும் புச் செய்கை மற்றும் சீனித் தொழிற்சாலை திட்டத்தை முற்று முழுதாக எதிர்க்கின் றோம். இந்த விடயம் தமிழர் களுக்குப் பாரதூரமானதாக அமையப்போகின்றது. ☞2

## சாரதிக்கு மறியல்

பொலன்னறுவை - மன்னம்பிட்டி பகுதியில் விபத்துக்குள்ளான பஸ்ஸை செலுத்திய சாரதி விளக்கம றியலில்வைக்கப்பட்டுள்ளார்.

அவர் நேற்று பொலன் னறுவை நீதிவான் நீதிமன் றில் முற்படுத்தப்பட்டார். அவரை ஜூலை 24 வரை யில் விளக்கமறியலில் வைக் குமாறு நீதிவான் உத்தர விட்டார்.

ஞாயிறு இரவு இடம் பெற்ற இந்தக் கோர விபத் தில் சிறுவன் ஒருவர், பல்க லைக்கழக மாணவர்கள் இருவர் மற்றும் ☞2

## பஸ் மோதியதில் இருவர் உயிரிழப்பு



வாகனவிபத்தில்இருவர் உயிரிழந்தனர், 29 பேர் காயமடைந்தனர்.

இந்தவிபத்துபாதெனிய - அனுராதபுரம் வீதியின் அம்பன்பொல பகுதியில் நேற்று அதிகாலை இடம் பெற்றது.

பாதெனியவில் இருந்து அனுராதபுரம் நோக்கிப் பயணித்தபஸ்,நிறுத்தி ☞2

## பொலிஸ், இராணுவம் கொடுக்கும் வலியைவிட சமூகம் கொடுக்கும் வலியே மிகவும் கொடுமை

### முன்னாள் போராளி ஆதங்கம்



பொலிஸ், இராணுவம் கொடுக்கும் வலியைவிட சமூகம் கொடுக்கும் வலி மிகவும் கொடுமையானது என முன்னாள் போராளி செல்வநாயகம் அரவிந்தன் தெரிவித்தார்.

போராளிகள் நலன்புரிச் சங்கத்தின் முதலாவது அலு வலகம் வவுனியாவில் ஞாயி ற்றுக்கிழமை திறந்து வைக்க ப்பட்டது.

இந்த நிகழ்வில் உரை யாற்றுகையிலே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித் ததாவது:

விழுப்புண்ணால் பாதிக் கப்பட்டு தொடர்ந்தும் இன்று வரை காயங்களோடு போரா டிக் கொண்டிருக்கின்ற வர்க ளுக்கான மருத்துவ உதவி களை வழங்க வேண்டிய தேவை எங்களுக்கு இருக் கின்றது. உயிரிழந்த பின்னர் இறுதிச்சடங்கைச்செய்வதை விட அவர்கள்வாழ்வதற்கான வழிவகைகளைச் செய்து கொடுக்க விரும்புகின்றோம்.

முன்னாள்போராளிகளில் நூற்றுக்கணக்கானவர்கள் இன்றுஇங்குவந்திருந்தாலும் இவர்களில் அநேகமானவர் கள் வறுமைக்கோட்டுக்குக் கீழும், வாழ்வாதாரத்துக்காகப் போராடுகின்ற நிலைமையே காணப்படுகின்றது.

அரசு செய்ய வேண்டிய கடமையைப் போரா ☞2

## உறங்கிக்கொண்டிருந்த இளைஞர் சுட்டுக்கொலை

### முல்லைத்தீவில் பயங்கரம்





(ச.தவசீலன்)

முல்லைத்தீவுமாவட்டம், மல்லாவி பொலிஸ் பிரிவுக் குட்பட்ட பாலிநகர் பகுதியில் உள்ளவீடொன்றில்நுழைந்த மர்மநபர்கள்தூங்கிக்கொண் டிருந்த இளைஞரைச் சுட்டுக் கொன்றனர்என்றுபொலிஸார் தெரிவித்தனர். .

தூக்கத்தில் இருந்த இளைஞர் சம்பவ இடத்தி லேயே உயிரிழந்துள்ளார்.

அதே பகுதியைச்சேர்ந்த 23 வயதான மகேந்திரன் டிலக்ஸன் என்ற இளைஞரே உயிரிழந்தார்.

நேற்றுநள்ளிரவுவீட்டின் வாசல் கதவைத் திறந்து கொண்டு உள்நுழைந்த மர்மநபர்கள்,அறையில்உறக் கத்தில்இருந்த இளைஞர்மீது துப்பாக்கியால் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த நபர் ஒரு கொலைச் சம்பவத்தில் சந் தேகநபராகக்கைதாகிவிளக்க மறியலில் வைக்கப்பட்டு சில நாட்களுக்கு முன்புதான் பிணையில் விடுவிக்கப்பட் டிருந்தார்என்றும்பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை ஞாயிறு இரவுபாலிநகர்பகுதியில் ☞2

## அ'புரம் விபத்தில் தந்தை, மகன் பரிதாபச் சாவு

வாகன விபத்தில் ஒரே குடும்பத்தைச்சேர்ந்தஇருவர் சாவடைந்துள்ளனர்.

இந்தச்சம்பவம் அநுரா தபுரம் மாவட்டம், கெப்பிட்டிக் கொல்லாவை பிரதேசத்தில் நேற்று மாலை 6.15 மணியளவில் இடம்பெற் றுள்ளது.

47 வயதுடைய தந்தை யும், 17 வயதுடைய மக னுமேஇதன்போதுஉயிரிழந் துள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் சென்ற தந்தையையும் மகனையும்எதிர்த்திசையில் வந்த ஹயஸ் வான் மோதியுள்ளது. ☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

செய்கிறார்கள். (இது சி.வி.கே. சிவஞானத்திற்கு). நான் 2010பதவியைப்பொறுப்பேற்றேன். அதன் பின்னர் 2012, 2014, 2016, 2019 ஆகிய ஆண்டுகளில் தேசிய மாநாட்டை நடத்தி இருக்கின்றேன். 2021கொரோனாவின் காரணமாக அதனை நடத்த முடியவில்லைஎன்றுதெரிவித்திருந்தார் என்பதையும் குறிப்பிட்டிருந்தேன்.

குறுக்கிட்ட சுமந்திரன், ஆம், தலைவர்தேசியமாநாடுகளை நடத்தியிருக்கிறார். அதில் அவரைக் குறை சொல்ல முடியாது. 2016க்குப்பின்னர் நான்கு வருடங்கள் கழித்து மீண்டும் மாநாடு நடந்தது. இப்போது மூன்று வருடங்களாகமாநாடுநடக்கவில்லை என்றுதெரிவித்தார். அத்துடன் மாவையர் வாயை மூடிக் கொண்டார்என்றும்தெரிவித்திருந்தேன்.

நேற்று அழைப்பெடுத்த கட்சிப்பிரமுகர் ஒருவர், அந்த விடயத்தில் இருந்த தவறைச் சுட்டிக்காட்டினார். சுமந்திரன் சொல்லும்போது 2012, 2014 பொதுக் கூட்டங்கள் நடந்தன என்பது சரி, ஆனால் 2016இல்நடந்திருக்கவேண்டிய கூட்டத்தை 2019இல் நடத்தினார் என்றே குறிப்பிட்டிருந்தார். அதாவது 5வருடங்கள் கடந்தே மூன்றாவது தேசிய மாநாடு கூட்டப்பட்டது, இப்போது 3 வருடங்களாகஅதுமீண்டும்கூட்டப்படவில்லைஎன்றேஅவர்அர்த்தப்படுத்தினார் என்று தெரிவித்தார். 2016 நடக்கவேண்டிய தேசிய மாநாடும் நடக்கவில்லை, அது நடந்ததாக நான் குறிப்பிட்டது தவறு என்று சுட்டிக்காட்டினார்.

அதுமட்டுமில்லை,மற்றொரு கேள்வியையும் அவர் முன்வைத்தார். அது மிக நியாயமான கேள்வியாகவும் இருந்தது. மாவையர்தேசிய மாநாட்டுக்கு நாள் குறிக்கவில்லை, அவர் மாநாட்டைஇழுத்தடித்துக்கொண்டேபோய்தனதுதலைமையைத் தக்கவைக்கமுயற்சிக்கின்றார் என்கிற உங்கள் குற்றச்சாட்டெல்லாம்சரி. ஆனால், அந்தக் கேள்வியை, குற்றச்சாட்டை ஏன் தமிழ் அரசுக் கட்சியின் மீது மட்டும் வைக்கிறீர்கள்? மற்றக் கட்சிகளுக்கு எதிராக எழுப்பப்படாத இந்தக் கேள்விகள் ஏன் மாவையை நோக்கிஎழுப்பப்படுகின்றன? என்றார்.

எனக்கு அவர் சொல்ல வந்ததன்உள்ளார்த்தம்உடனடியாக விளங்கவில்லை. அப்படியென்றால்மாவையர் செய்வது சரியென்று சொல்ல வருகிறீர்களாஎன்றுஅவரிடம் சற்று இறுக்கமாகவே கேட்டேன். ''இல்லை. நான் அது பற்றிச் சொல்லவரவில்லை" என்றார் அவர். மாவையர் தன் ஆளுமையின் வழி தன் தலைமையைத் தக்க வைப்பதற்கு முயலாமல் குறுக்கு வழியில் அதனைச் செய்வதற்கு முயற்சிப்பதால் விமர்சனத்திற்கு உள்ளாகின்றார் என்பதைத் தன்னாலும் புரிந்துகொள்ள முடிகின்றது என்ற அவர், ஆனால், கட்சித் தலைமையை10வருடகாலத்தில்மற்றொருவருக்குவிட்டுக் கொடுக்க அவர் தயாராக இருக்கிறார். அந்த நிலமை வேறுஎந்தத்தமிழ்க்கட்சியில் இருக்கிறது? என்றார்.

ரெலோவில் செல்வம் எத்தனை வருடங்களாகத் தலைவராக இருக்கிறார்? புளொட்டில் சித்தார்த்தன் எத்தனை வருடங்களாகத் தலைவர்களாக இருக்கின்றார்கள்? ஏன் ஈபிடிபியில் டக்ளஸ்தேவானந்தாவைத் தவிர்த்து வேறு யாரை யாவதுஅடுத்தமட்டத்தலைவராகவாவது அடையாளம் காண முடியுமா? தான் தான் ஈபிடிபி, ஈபிடிபிதான் தான் என்று அவர் நீதிமன்ற வழக்குகளிலேயேபலதடவைகள் கூறியிருக்கிறார். அப்படிப்பட்ட அவர் எத்தனை வருடங்களாகஅந்தக்கட்சியின்தலைவராக இருக்கின்றார்? ஈபிஆர்எல்எவ் கட்சியில் சுரேஸ் எத்தனை ஆண்டகளாகத்தலைவராக இருக்கின்றார்? இவர்கள் எல்லோரும் மாவையை விட வயதில்இளையவர்கள். ஆனால், மாவைக்கு முன்னரே கட்சித் தலைமைப் பதவிக்கு வந்தவர்கள். தங்கள் கதிரைகளை விட்டுவிட மனமின்றி, அடுத்தடுத்த தலைமைகளேஉருவாகாமல்பார்த்துக் கொண்டு, அல்லது அப்படிப் பட்டதலைவர்களைஅழித்துக் கொண்டுதங்கள்பதவியைத் தக்கவைத்திருக்கிறார்கள். அது பற்றியெல்லாம் ஏன் யாரும் கேள்வி எழுப்பியதில்லை. அவர்களுக்கு மட்டும் கட்சித் தலைமைப்பதவிஎன்னஆயுட் காலப் பதவியா? எப்போது பதவியை விட்டுப்போவீர்கள் என்று ஏன் அவர்களிடம் கேட்கப்படுவதில்லை?

பாவம்மாவையர்அவருக்கு தனக்கு அடுத்த நிலையில் தலைவர்கள் வளர்வதைத் தடுக்க,வெட்டியெறியத்தெரியவில்லை அதனால்தான் இன்றுஅவருக்குஇந்தநிலை. தனக்கு அடுத்த நிலையில் மற்றவர்கள் தலைவர்களாக வளர்வதைத் தடுப்பதுதான் ஆளுமை என்றால், அப்படி வளரக்கூடியவர்களைமுதலிலேயேஇனங்கண்டுஅவர்களைக்கட்சியைவிட்டுத்துரத்தியடிப்பதுதான் அரசியல் சாணக்கியம்என்றால்அதை மாவையர் கற்றுக்கொள்ளாமல் இருப்பதே நல்லது என்றுநீண்ட உரை முழங்கி முடித்தார் அவர்.

அவர் கேட்டதில் நியாயம் இல்லாமல்இல்லை.மற்றைய கட்சிகளில் தலைவர்களாக இருப்பவர்கள் அந்தப் பதவி ஏதோ தமது சொத்து என்பது போலத்தான் நடந்துகொள்கிறார்கள், உட்கட்சி ஜனநாயகம் என்பது அந்தக் கட்சிகளுக்குள் எவ்வளவு தூரம் இருக்கின்றது என்கிற கேள்வி இருக்கத்தான் செய்கிறது என்பதெல்லாம் சரிதான். ஆனால், அதை அந்தக் கட்சிக்குள் இருப்பவர்களே கேட்க வக்கற்றிருக்கும் நிலையில் அவை சர்ச்சையாக உருவெடுக்க வாய்ப்பில்லை. தமிழ் அரசுக் கட்சிக்குள் அப்படியில்லை. அங்கு தலைமையைப் பறித்தெடுக்கத்தயாராகப்பலர் இருப்பதால் அது எப்போதும் விவாதப் பொருளாகவே இருக்கின்றது. இரண்டாம் நிலைத் தலைவர்களை வளரவிட்டது மாவையரின் குறைபாடல்ல, அத்தகைய தலைவர்களையும்வைத்துக் கொண்டு கட்சியைக் கட்டிக் காக்கும் திறத்தை வளர்த்துக் கொள்ளாமல் விட்டதுதான் அவரது குறைபாடு என்றேன் நான்.

என்னவோபோங்கள்என்று அலைபேசியை அணைத்துவிட்டார் அவர். இப்படி தலைமையைக் கட்டிப் பிடித்துக்கொண்டுதொங்கும் தலைவர்களைப்பற்றிநீங்கள் என்ன நினைக்கிறீர்கள் வாசகர்ளே.

இடிமின்னல்
(idiminnal23@gmail.com)

## சரத் வீரசேகரவின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உங்கள் கவனத்திற்குக் கொண்டுவரவிரும்புகிறேன்..

இந்தப் பேச்சு நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைகள் என்ற மறைப்பின் கீழ் செய்யப்பட்டது, ஆனால் இது முழு நீதித்துறையின் கண்ணியத்தின் மீதும் நடத்தப்பட்ட வாய்மொழித்தாக்குதலாகும். மேற்கூறியதளத்தின்நீதிவான் ஆய்வின்போது நான் அந்த இடத்தில்இருந்தேன், மேலும் நீதிவான் முழுமையான நியாயமாகவும் தொழில் ரீதியாகவும் அங்கு செயற்பட்டார் என்பதை நான் கண்டேன்.

முல்லைத்தீவு நீதிவான் மன்றில் எண் புயூ/673 இன் கீழ் விசாரணையில் உள்ளவழக்குத்தொடர்பாகப் பாதகமான கருத்துக்களைத் தெரிவிப்பதும் நாடாளுமன்ற மரபுகளுக்கு எதிரானது.

தொல்பொருள் திணைக்களம் மற்றும் கிராம மக்கள் தொடர்புபட்ட வழக்குத் தொடர்பாக ஜூலை 4 அன்று முல்லைத்தீவு குருந்து மலையில் நீதிவான் நேரடி ஆய்வுசெய்ததன்விளைவாக இந்த உரை நிகழ்த்தப்பட்டது. தளத்தில் நீதித்துறை விசாரணையின் போது, சரத் வீரசேகர சமர்ப்பனம் செய்ய முயன்றார், இருதரப்புசட்டத்தரணிகளும் ஏற்கனவே சமர்ப்பனங்களைச்செய்திருந்த காரணத்தாலும், மற்ற அங்கிருந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசியல்வாதிகளும்சமர்ப்பணங்களைச் செய்யும் விருப்பத் தோடு இருந்தார்கள், ஆனால் அவை விசாரணைக்கு அவசியமற்றவையாகஇருந்த காரணத்தாலும் சரத் வீரசேகரவின் சமர்ப்பணத்தை ஏற்க நீதிவான் மறுத்துவிட்டார்.

சில பௌத்த பிக்குகள் அங்கு பூசை மற்றும் சடங்குகளை செய்ய முயன்றனர், நீதிமன்றத்தின் சோதனை நடந்து கொண்டிருந்ததால், நீதிவான் அவற்றை நிறுத்த உத்தரவிட்டார். நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தனது உரையின்போது நீதிவானை "தெமல ஜாதிய மஜிஸ்ரேட்வரயா" என்று பல தடவைகள் குறிப்பிட்டதுடன், இது ஒரு "பௌத்த ரட்டக்" என்றும் தெரிவித்தார். இது மேற்படி நீதித்துறை அதிகாரிக்கு எதிரான இனவாத அறிக்கை.இதுநீதித்துறையின் சுதந்திரத்திற்கு எதிரான தாக்குதல்,இதுதமிழ்/முஸ்லிம் இனங்களைச் சேர்ந்த நீதிவான்கள்/நீதிபதிகள் நாட்டின் நீதித்துறை அதிகாரிகளாகச் செயல்பட இயலாத அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்றது.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் இந்த விடயத்தில் ஒரு நிலைப்பாட்டை எடுக்க வேண்டும், பிரதம நீதியரசர், நீதிசேவைகள்ஆணைக்குழு மற்றும்நாடாளுமன்றசபாநாயகர் ஆகியோரிடமும் இந்த விடயத்தைஎடுத்துச்செல்லவேண்டும்என்றும்நான்கேட்டுக் கொள்கிறேன்-என்றுதெரிவிக்கப்பட்டுள்ளது.

## மண்ணை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறான விடயங்கள் தான் தமிழர் விடுதலைப் போராட்டந்திற்கான அடித் தளத்தையே உருவாக்கியது. சீன நாட்டின் பின்னணியுடன் தாய்லாந்தில் பதிவு செய்யப்பட்டஓர்சீனநிறுவனத்தின் நில ஆக்கிரமிப்பாகவே இதனைப் பார்க்க முடியும்.

1968இல் கொண்டு வரப்பட்ட மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் நோக்கத்தில் ஒன்றுதான் இந்த சீனித் தொழிற்சாலை. இலங்கை அரசும் சீனாவும் ஒன்றிணைந்து தமிழர் தாயகப் பகுதியிலே நில ஆக்கிரமிப்பின் வடிவமாக இந்த சீனித் தொழிற்சாலையைக்கொண்டு வருகின்றார்கள். அதற்கான அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதனை நானும் பார்த்திருக்கின்றேன்.

இந்தத் திட்டத்திற்குத் தமிழர்களிடம்இருந்துஎதிர்ப்பு வருவதைத் தடுப்பதற்காக ஜனநாயகக் கூட்டணியில் அங்கம் வகிக்கின்ற ரெலோ கட்சி இலங்கை ஆட்சியாளர்களுக்கு ஆதரவாகச் செயல் பட்டுக்கொண்டிருக்கின்றது.

இந்தத் திட்டத்தை தாய்லாந்து நிறுவனமே மேற்கொள்கிறது, வடக்கின் அபிவிருத்திக்காக கொண்டு வருகின்றோம், வேலை வாய்ப்புக்கள் வழங்கப்படும், இதில் போராளிகளிற்கான வேலை வாய்ப்புக்களும் வழங்கப்படும் என்று ரெலோ எமக்குக் கதைவிடுகின்றது. எங்களுக்குத் தெரியும். உலகின் எந்த மூலையில் என்ன உள்ளது என்பதனை நாம் அறிவோம். உலகில் எமது வலைப் பின்னலும் உண்டு. அதன்படி இந்த நிறுவனம்யாருடையது, எந்த வழியில் யாரால் கொண்டு வரப்பட்டது என்பது எமக்கும் தெரியும். எனவே இந்த கதையெல்லாம் எம்மிடம் விடப்படக்கூடாது.

இந்த இடத்தின் பின்னால் மணலாறு, வெலிஓயா, பதவியா பகுதிகள் இருக்கின்றன. மறுபுறம்அநுராதபுரமும் அருகே சிங்கள குடிகளும் உண்டு. 30ஆயிரம்பேருக்கு வேலை வாய்ப்பு என்றால் அந்த 30 ஆயிரம் பேரும் எங்கிருந்து வரப்போகின்றார்கள்? அநுராதபுரம், பதவியா, சிலோன் தியட்டர் பகுதிகளில் இருந்தே அவர்கள்வேலைக்கு உள்வாங்கப் படவுள்ளனர். வேலைக்கு வருபவர்கள் பின்னர் அங்கேயே குடியேற்றப்படலாம் அதாவது அபிவிருத்தி என்ற பெயரில் இவை யெல்லாம் நடக்கும்

இந்தத்திட்டத்தின்மூலம் தமிழர்களின் எல்லைப் பகுதி அநுராதபுரத்தில் இருந்து ஒட்டுசுட்டானிற்கு நகரும். அதன் மூலம் நெடுங்கேணி உள்ளிட்ட பெரு நிலப்பரப்பு சிங்கள வலயமாக மாற்றப் படும். எமது நிலம் விற்கப் படுமாக இருந்தால் அது எந்த தரப்பாகஇருந்தாலும்நாங்கள் அதனை எதிர்ப்போம்.

எமது மக்கள் சார்ந்து, எமதுஉரிமைசார்ந்தவிடயத்தில் ஆயிரக் கணக்கான போராளிகள் அப் பிரதேசத்திற்காக உயிர்த் தியாகம் செய்திருக்கிறார்கள். அந்த மண்ணை விற்று நீங்கள் காசுபெறுவீர்கள்எனில் உங்கள் கூட்டு எமக்குத் தேவையில்லை. உங்களிடம் பேச வேண்டிய தேவையும் இல்லைஏனெனில்செல்வம் அடைக்கலநாதன. தமிழ்த் தேசியத்தில் ஓர் பெரிய ஆள் இல்லை - என்றார்.

## நீதிபதிக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குழுவினரும்.

நீதிபதியின் விசாரணையின் இடையே குறுக்கிட்டு சரத்வீரசேகர கருத்துத் தெரிவிக்க முயன்றபோது, இங்கேநீதிமன்றவிசாரணை இடம்பெறுகின்றது உங்களுக்குக் கருத்துக்கூற அதிகாரம் இல்லை என்று தெரிவித்தநிதிபதி அவரையும் அவரது குழுவினரையும் அந்த இடத்திலிருந்து விலகியிருக்கும்மாறு கட்டளையிட்டார். அதைத்தொடர்ந்தே பொது ஜன பெரமுன வின் நாடாளுமன்ற உறுப்பினரான சரத் வீரசேகர நாடாளுமன்றத்தில் நீதிபதிக்கு எதிராக இனவாத ரீதியான கருத்துக்களை முன்வைத்தார்.

நீதிபதிக்கு அழுத்தத்தை கொடுத்து, நீதித்துறை சுயாதீனத்தை பாதிக்கும் வகையில் அவரது உரை அமைந்திருந்தது என்று தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதனைக்கண்டித்திருந்தனர்.

இந்த நிலையிலேயே இன்றைய போராட்டத்தை முல்லைத்தீவு சட்டத்தரணிகள் நடத்தவுள்ளனர். இந்தக் கண்டனப் போராட்டத்தில் வடக்கு மாகாண இதர சட்டத்தரணிகள் சங்கங்களின் உறுப்பினர்களும் கலந்து கொள்வார்கள் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. (02)

## பொலிஸ்,....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளிகளுக்குச் செய்யாததால் இன்றுவரை தமது வாழ்க்கைக்காகப் போராடிக்கொண்டு இருக்கின்ற சமூகமாகவே இருக்கின்றோம்.

இனிமேலாவதுபோராளிகளைப் புறக்கணிப்பது அல்லது வேற்றுமைகளைக் கடந்து தமிழி இனத்துக்கு ஒட்டுமொத்தமானதொரு சேவையைஆற்றவேண்டிய கடப்பாட்டைஉணர்ந்துபோராளிகளை முதலில் சமூகம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

பொலிஸ், இராணுவம் அடக்குமுறைகள் அத்தோடு உளவியல் ரீதியான தாக்கத்தை விட சமூக ஒடுக்குதல்களாலே பாதிக்கப்படுகின்ற வலிமிகவும்அதிகளவாகவே இருக்கின்றது.

இராணுவம், பொலிஸ் திணைக்களங்களோடு போராடுகின்ற அதேநேரம் எங்களுடைய சொந்த மக்களோடும், சமூகத்தோடும் போராடுகின்றவர்களாகவே நாம் இருந்து வருகின்றோம்.

எனவே இவ்வாறான ஒரு நிலையிலே போராளிகளது நலனையும், சமூகத்தினுடையநலனையும்கருத்தில்கொண்டு போராளிகள் நலன்புரிச் சங்கத்தை ஆரம்பித்திருக்கின்றோம்.

போராளிகள் நலன்புரிச் சங்கத்துக்குப் பொதுமக்கள், போராளிகள்அனைவரினதும் ஒத்துழைப்பும்இருக்கவேண்டும். முதலாவது காரியாலயம் வவுனியாவில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. அனைத்து மாவட்டங்களிலும் காரியாலயம் திறந்து வைக்கப்படும்.' - என்றார். (02)

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மண்வெட்டியால் தனது நண்பனைக்கொத்தினார்என்றும், இதனால் பலத்த காயமடைந்தநிஷாந்தன், வவுனியா வைத்தியசாலையில்சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார் எனவும் பொலிஸார் நீதிமன்றில் முதல் அறிக்கை தாக்கல் செய்துள்ளனர்.

கொலை நடந்த இடத்தைச்சோதனைசெய்தபோது மதுப் போத்தல்கள், தாக்குதலுக்குப் பயன்படுத்திய மண்வெட்டி மற்றும் இறந்தவரின் சிலபொருட்கள்கண்டுபிடிக்கப்பட்டன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

கொலையின் பின்னர் சந்தேகநபர் அப்பகுதியிலிருந்து தலைமறைவானார் எனவும், நேற்று அதிகாலை ஈச்சங்குளம் பொலிஸ் நிலையத்தில் அவர் சரணடைந்தார்எனவும்பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர். (100,02)

# பிரான்பற்றில் இளம் குடும்பஸ்தர் கத்தியால் குத்திப் படுகொலை

## இருவர் கைது

பிரான்பற்றில் கத்தியால் குத்திக் காயப் படுத்தப்பட்ட நபர் சிகிச்சை பயனின்றி ஒரு நாளின் பின்னர் நேற்று உயிரிழந்தார். கொலைச் சந்தேகநபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இளவாலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிரான்பற்று முருகன் கோவிலுக்கு அருகாமையில் உறவினர்களுக்கு இடையே ஏற்பட்ட வாக்குவாதம் இவ்வாறு கொலையில் முடிந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பண்டத்தரிப்பு - பிரான்பற்று பகுதியைச் சேர்ந்த ராமச்சந்திரன் ராஜ்குமார் (வயது 35) என்ற நான்கு பிள்ளைகளின் தந்தையே சம்பவத்தில் உயிரிழந்தார்.

ஞாயிறு நள்ளிரவு உறவினர்கள் மூவருக்கு இடையே ஏற்பட்ட முரண்பாடு காரணமாக இருவர் சேர்ந்து ஒருவரைக் கத்தியால் குத்தியுள்ளனர்என்றுபொலிஸார்தெரிவித்தனர்.

கத்திக்குத்துக் காயங்களுக்கு உள்ளாகிப் படுகாயமடைந்த நபர் தெல்லிப்பழை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பயனின்றி நேற்றுக் காலை உயிரிழந்தார்.

இச்சம்பவம்குறித்துஇருவரைஇளவாலை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

# தமிழ் அரசுக் கட்சிக்கு கண்டனம்

தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில்இந்தியமீனவர்களின்அத்துமீறலால் வடக்குத் தமிழ் மீனவர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகள் குறித்து ஆராயப்படாததை - அக்கறை செலுத்தப்படாததை - மீனவர் சங்கங்கள் கண்டித்துள்ளன.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள யாழ். மாவட்ட கடல் தொழிலாளர் கூட்டுறவு சங்க சமாசங்களின் சம்மேளனத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசிய மீனவர் சங்கப் பிரதிநிதிகள் இந்தக் கண்டனத்தைத் தெரிவித்தனர்.

இந்தியா செல்லும் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அங்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் எல்லை தாண்டிய இழுவைப்படகுமீன்பிடியைத்தடைசெய்யுமாறு வலியுறுத்தவேண்டும் என்று அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் வேற்றுமையை மறந்து வலியுறுத்தவேண்டும் என்றும் மீனவர்கள் தெரிவித்தனர்.

நேற்றைய செய்தியாளர் சந்திப்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

தமிழரசு கட்சியின் மத்திய குழு கூட்டம் யாழ்ப்பாணத்தில் இடம் பெற்றபோது அதில் பேசப்பட்டவிடயங்களைஊடகங்கள்வாயிலாக அறிந்து கொண்டோம்.

அரசமைப்பின் 13ஆவது திருத்தம், தமிழரின் இனப்பிரச்சனை, முல்லத்தீவு புதைகுழிவிவகாரம்என்றுஎன்னவெல்லாமோபேசியிருக்கிறார்கள். ஆனால் எமது வாழ்வாதாரப் பிரச்சினையான இந்திய மீனவர்களின் எல்லைதாண்டிய இழுவை மடித் தொழில் குறித்து அவர்கள் எதுவும் ஆராயவில்லை. இதனைநாம்வன்மையாகக்கண்டிக்கின்றோம்.

நாட்டினுடைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியா செல்ல உள்ள நிலையில்பதின்மூன்றுதொடர்பில்இந்தியபிரதமருக்கு தமிழ்கட்சிகள் கடிதம் ஒன்றை அனுப்ப உள்ளதாக தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்திருந்தார்.

இந்தியஎல்லைதாண்டியமீன்பிடிதொடர்ச்சியாக இடம்பெற்று வரும் நிலையில் எமது மீனவர்கள் அதனால் தொடர்ச்சியாகப் பாதிக்கப் பட்டு வருகின்றார்கள். ஆனால் இந்தியா இழுவைப் படகுகளை தடை செய்வது தொடர்பில் இந்திய பிரதமருக்கு அவர்கள் கடிதம் அனுப்புவதாகத் தெரியவில்லை.

தமிழ்க் கட்சிகளிடம் நாம் ஒன்றைக் கேட்க விரும்புகிறோம் எமது மீனவ சமூகம் தொடர்ச்சியாக இந்திய இழுவைப்படக்குகளால் பாதிக்கப்பட்டு வருகின்றது.

இந்தியா இழுவைப் படகுகளைக் கடற்படை கைது செய்துவரும் நிலையில், அந்தப் பணி தொடர்ந்து நடக்கவேண்டும் என்று அமைச்சரிடம் வலியுறுத்துகின்றோம்.

இவ்வாறான நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்கு பயணம் ஆவதற்கு போதிய கால அவகாசம் இருக்கின்ற நிலையில் தமிழ் கட்சிகள் ஓரணியில் நின்று எமதுபிரச்சனைதொடர்பில்இந்தியபிரதமருக்கு கடிதம்ஒன்றைஅனுப்பவேண்டும்-என்றனர்.

இந்தச் சந்திப்பில் யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க சமாசங்களின் சம்மேளன உப தலைவர் அந்தோணிப் பிள்ளை பிரான்சிஸ் ரட்ண குமார் மற்றும் வடமராட்சிவடக்குகடற்றொழிலாளர்கூட்டுறவு சமாசத்தின்தலைவர் செல்லத்துரைநற்குணம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## சாரதிக்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெண்கள் எண்மர் உட்பட 11 பேர் உயிரிழந்தனர்.

விபத்தில் காயமடைந்த 41பேர்வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். (02)

## உறங்கிக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாள் வெட்டுக்கு இலக்காகிப் படுகாயமடைந்திருந்தஇருவர் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் ஒருவர் மல்லாவி ஆதார வைத்தியசாலையிலும் மற்றையவர் கிளிநொச்சி மாவட்டப் பொது வைத்தியசாலையிலும் சேர்க்கப்பட்டனர்.

பாலிநகரில் இரு குழுக்களிடையேஇடம்பெற்றமோதல் காரணமாக இருந்து வந்த பகையே டிலக்ஸன் சுட்டுக் கொல்லப்படக் காரணமாக இருக்கலாம் என்ற கோணத்தில்மல்லாவிபொலிசார்விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்

கிளிநொச்சி மாவட்ட தடயவியல்பொலிசார்சம்பவ இடத்தில் விசாரனைகளை முன்னெடுத்தனர் நீதிவான் நேரில்வந்துசம்பவஇடத்தில் விசாரணைநடத்தியபின்னர் சடலத்தைஉடற்கூறாய்வுக்கு உட்படுத்திய பின்னர் உறவினர்களிடம்கையளிக்குமாறு பொலிசாருக்கு பணித்தார் (02)

## பஸ் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைக்கப்பட்டிருந்த கொள்கலனுடன் மோதியதில் இந்த விபத்து சம்ப வித்துள்ளது.

தலாவ பகுதியைச் சேர்ந்த 32 மற்றும் 71 வயதான இருவரே விபத்தில் உயிரிழந்தனர்.

இதன்போது காயமடைந்தவர்களில் 6 பெண்களும், ஆண் ஒருவரும் அம்பன்பொல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மேலும் 18 பெண்களும் 4 ஆண்களும் கல்கமுவ வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (02)

## அ'புரம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்போது சம்பவ இடத்திலேயே தந்தையும் மகனும்சாவடைந்துள்ளனர்.

ஹயஸ் வானின் சாரதியைக்கைதுசெய்துள்ளபொலிஸார், விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (02)

## அளம்பிலில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குண்டு - 01, ஆர் பி ஜி. குண்டுகள் - 6, கைகுண்டு-56, பெரிய பரா குண்டு-13, சின்ன பரா குண்டு- 01, தோட்டாக்கள் ஒரு தொகை என்பன மீட்கப்பட்டன.

நீண்டகாலம்மண்ணில் புதைக்கப்பட்டிருந்ததால்கறல் ஏறி பயன்பாட்டுக்கு உதவாத நிலையில் காணப்படும் இவற்றை அழிப்பதற்கான நடவடிக்கைகளை அதிரடிப் படையினர் மேற்கொண்டுள்ளனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு
தொலைபேசி இலக்கம்
076 443 80 22



காலைக்கதிர் Kalaikkathir

## அதிகாரிகளின் பலவீன தன்மையால் நிறுவனங்களைச் சீரழிக்க முடியாது

### பிரசன்ன ரணதுங்க திட்டவட்டம்



உள்ளூராட்சிநிறுவனங்களின் அனுமதி பெறாமல் ஆரம்பிக்கப்பட்டுள்ள திட்டங்கள் தொடர்பில் நகர அபிவிருத்தி அதிகார சபை ஆராய்ந்து இரண்டு வாரங்களில் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அமைச்சின் ஆலோசனை தெரிவுக்குழுவில் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

உள்ளூராட்சி நிறுவனங்களிடம் அனுமதி பெறாமல்திட்டங்கள்ஆரம்பிக்கப்படுவதால் பல்வேறு பிரச்சினைகள்ஏற்பட்டுள்ளன என அமைச்சர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

எனவே, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களால் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்படும்போது உரிய உள்ளூராட்சி நிறுவனங்களின் அனுமதியைப் பெறுவது கட்டாயம் என அமைச்சர் தெரிவித்தார்.

கடந்த வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் நடைபெற்ற நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் ஆலோசனை தெரிவுக் குழுவில் கலந்துகொண்டு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கஇதனைக்குறிப்பிட்டார்.

அங்கு அமைச்சர் மேலும்கூறியவைவருமாறு-

சில திட்டங்களை நடைமுறைப்படுத்தும்போது உள்ளூராட்சி நிறுவனங்களின் ஒப்புதல் தேவை. உள்ளூராட்சி நிறுவனங்களிடம் அனுமதி பெறாமல் திட்டங்களைத் தொடங்குவது தவறு. பிறகு ஏதாவது நடந்தால் பொறுப்பேற்க யாரும் இல்லை. பின்னர், அவர்கள் பல்வேறு நிறுவனங்களை குற்றம் சாட்டுகிறார்கள். அப்படி எதுவும் நடக்கக்கூடாது.

ஒரு சாதாரண மனிதன் ஒரு திட்டத்தைத் தொடங்க வந்தால், அவரால் தாங்க முடியாத நிபந்தனைகள் விதிக்கப்படுகின்றன. ஒரு பெரிய அளவிலான திட்டத்தின் நிபந்தனைகள் மீறப்படும்போது, சில நேரங்களில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படுவதில்லை. ஒவ்வொரு நபரையும் தனித்துவமாக்க முடியாது. நாம் பேசும் பல திட்டங்கள் வெள;வேறு காலங்களில் தொடங்கப்பட்டவை. ஆனால், இந்தத் திட்டங்களை நாம் பின்பற்ற வேண்டும். இவை தொடர்பாகக் கடந்த ஆலோசனைக் குழுவில் பேசினோம். அங்கு எடுக்கப்பட்ட முடிவுகள் இன்னும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. குறைந்தபட்சம் ஆலோசனைக் குழுவில் பேசும்போது இந்தத் திட்டங்களைப்பற்றி தெரிந்து கொள்ளுங்கள்.

நிபந்தனைகள் மீறப்பட்டால் சட்ட நடவடிக்கை எடுங்கள். இதன் முன்னேற்றத்தை தேடிப்பாருங்கள். அதிகாரிகளின் பலவீனம் காரணமாக அரசு நிறுவனங்கள் சீரழிவதை அனுமதிக்க முடியாது. எனவே, இதைப் பரிசீலித்து இரண்டு வாரங்களுக்குள் உடனடியாக அறிக்கை தாருங்கள்.

அத்துடன் கொழும்பு கிரிஷ் கட்டடம் அமைந்துள்ள காணி நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமானது. இது பெறுமதிமிக்க காணியாகும். இந்த கட்டடம் எந்த தேவைக்கும் பயன்படுத்தப்படவில்லை. எப்படியும் முதலீட்டாளரை அழைத்து வந்து இதைப் பயன்படுத்திக்கொள்ள முயற்சிக்கவும். இந்த கட்டடத்தால் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்த வேண்டாம். இதுபோன்ற கட்டடங்களால் நகரத்தை அசிங்கமாக்கிவிடாதீர்கள்.

நகர அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் உள்ள காணிகள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு மீள் ஒதுக்கீடுசெய்யப்படுகின்றன. அது எழுத்துப்பூர்வமாக அறிவிக்கப்படும். ஆனால் சம்பந்தப்பட்ட நிறுவனத்திடம் இருந்து பதில் இல்லை. அரசாங்கங்கள் மாறுகின்றன. அமைச்சர்கள் மாறுகிறார்கள். மேலும், புதிதாக வருபவர்கள் அந்த பணிகள் குறித்து கேட்டால், அதிகாரிகள் எப்படி பதில் சொல்வார்கள்?

நான் சொல்கிறேன்... நாங்கள் போகும்போது, குப்பை குவியல்களை மற்றவர்களுக்கு போடக்கூடாது. இவை அனைத்தையும் முடித்து விட்டுத்தான் போக வேண்டும். - என்றார்.

இந்நிகழ்வில் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர்கள் அருந்திக பெர்னாண்டோ, தெனுக விதானகமகே, அமைச்சின் செயலாளர் டபிள்யூ.எஸ்.சத்யானந்த, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் தலைவர்கள், பணிப்பாளர்கள்ஆகியோர்கலந்துகொண்டனர். (05)





## டயகம நகரில் மதுபானசாலை சிறுவர்கள் எதிர்த்து போராட்டம்




நுவரெலியா - டயகம நகரில் புதிதாக மதுபானசாலை திறக்கப்படவுள்ளமையை எதிர்த்தும், அவ்வாறு திறப்பதற்கான அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு எதிர்ப்பு தெரிவித்தும் டயகம நகரைச் சேர்ந்த சிறுவர்கள் குழுவொன்று ஞாயிற்றுக்கிழமை டயகம நகரில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

டயகமநகரில்ஏற்கெனவே மூன்று மதுபானசாலைகள் உள்ள நிலையில், மற்றுமொருபுதியமதுபானசாலைக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில், அந்த மதுபானசாலையைதிறக்கக்கூடாது எனகோஷமிட்டுசிறுவர்கள்ஞாயிற்றுக்கிழமைஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். போராட்டத்துக்காக திரண்ட சிறுவர்கள் சுவரொட்டிகளையும்பதாதைகளையும் ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பினர். அத்துடன், கடந்த 2 நாள்களுக்கு முன்னரும்டயகமநகர்மற்றும் அதனை அண்மித்த தோட்டத் தொழிலாளர்கள் இந்த மதுபானசாலை திறப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தமைகுறிப்பிடத்தக்கது. (05)

## மலையகத்தில் பல்கலைக்கழகம் நிச்சயம் மலரும் என்கிறார் ஜீவன்





சொல்லுக்கு செயல் வடிவம் கொடுப்பதே எனது - எங்களது அரசியல்'ஸ்டைல்'. எனவே, மலையகத்தில் பல்கலைக்கழகம் நிச்சயம் மலரும். இதில்மாற்றுக்கருத்துக்கு இடமில்லை என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

பல்கலைக்கழக விவகாரத்தை வைத்து அரசியல் நடத்தாமல், அந்த மகத்தான பணிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

மலையக இளைஞர், யுவதிகளின் நீண்ட நாள் எதிர்பார்ப்பாக இருந்த மலையகத்துக்கென ஒரு பல்கலைக்கழகம் நிறுவுவதற்கான இறுதிக்கட்ட வேலைத்திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடலொன்று, அமைச்சர் ஜீவன் தொண்டமானின் அழைப்பின் பேரில் கொட்டகலைக்கு வருகை தந்த கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தலைமையில் இடம்பெற்றது.

கொட்டகலை ஆசிரியர் கலாசாலையை கேந்திரமாக கொண்டு பல்கலைக்கழகத்தின் முதற்கட்ட தொகுதியை நிறுவுவதற்கும், மேலும் நிர்வாக ரீதியான அனைத்து நடவடிக்கைகளையும் முன் நகர்த்திச் செல்வதற்குமான இறுதிக்கட்ட கலந்துரையாடலாக இது அமைந்தது.

பல்கலைக்கழகத்தில் என்னென்ன பாடவிதானங்கள் உள்ளடக்கப்பட வேண்டும் என்பது தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

அண்மையில் இலங்கை அரசு மற்றும் சர்வதேச ரீதியிலான உதவியுடன் மலையகத்தில் பல்கலைக்கழகம் நிறுவுவதற்கான வேலைத்திட்டத்தின் முதற்கட்ட நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது.

அத்தோடு, அமைச்சர் ஜீவனின் வேண்டுகோளுக்கிணங்க கல்வி அமைச்சர், பத்தனை ஸ்ரீபாத கல்வி யியல் கல்லூரிக்கு விஜயம் மேற்கொண்டார். கல்லூரியின் பீடாதிபதி, மாணவர்களுடன் அமைச் சர் ஜீவன் தொண்டமானும் கல்வி அமைச்சரும்கலந்துரையாடினர். கல்வி நடவடிக்கைகள், எதிர்காலத்திட்டங்கள் பற்றியும் கேட்டறிந்துகொண்டார்கள்.

கல்லூரிக்குத் தேவையான விடயங்கள் தொடர்பில் எம்மிடம் மாணவர்கள் சில கோரிக்கைகளை முன்வைத்தனர். அவற்றை நிவர்த்தி செய்வதற்குநடவடிக்கைஎடுக்கப்படும் என அமைச்சர் ஜீவன் இதன்போது உறுதியளித்தார். அது தொடர்பில் சம்பந்தப்பட்டதரப்புகளுக்கும்உடனடி பணிப்புரையை வழங்கினார்.

இந்தக் கலந்துரையாடலில், இலங்கைதொழிலாளர்காங்கிரஸின் தவிசாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ராமேஷ்வரன், இலங்கைதொழிலாளர்காங்கிரஸின் உயர்மட்ட குழுவினர், நுவரெலியா வலய கல்வி பணிப்பாளர், பத்தனை ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரி மற்றும் கொட்டகலை ஆசிரியர் கலாசாலையின்பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

இந்த சந்திப்புகளின் பின் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அமைச்சர் ஜீவன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அப்போது மேலும் கூறுகையில் - பல்கலைக்கழகத்துக்கான அனுமதிபல்கலைக்கழகங்களுக்கான ஆணைக்குழுவிடம் இருந்து ஏற்கனவே பெறப்பட்டிருந்தது. கொரோனா, பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட காரணங்களால் பணிகள் ஸ்தம்பித்தன. இது தொடர்பில் அமைச்சரவையில் ஜனாதிபதியிடம் பேசினேன். கல்வி அமைச்சரிடமும் கலந்துரையாடினேன். இந்தத் திட்டத்தை முன்னெடுப்பதற்கு இருவரும் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

10 ஏக்கர் காணி உள்ளது. தேவையேற்படின், அங்கு இருக்கும் அரச காணிகளையும் பெறலாம். மலை யகத்தில் பல்கலைக்கழகம் அமைந்தே தீரும். இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

உபபிரதேசசெயலகம்வந்தபோது அரசியல் நடத்தினர். நாம் பிரதேச செயலகத்தைகொண்டுவந்துள்ளோம். 4 ஆயிரம் இந்திய வீட்டுத் திட்டத்தை முழுமைப்படுத்தியுள்ளோம். அடுத்த 10 ஆயிரம் வீட்டுத்திட்டதையும் ஆரம்பிக்கவுள்ளோம். வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. - என்றார். (05)

## தொழிற்சங்கப் போராட்டம் மேற்கொள்ள அங்கத்தவர்களில் பெரும்பான்மையினர் விருப்பத்தை பெறுவது கட்டாயமாகும்

### அமைச்சர் மனுஷ நாணயக்கார கூறுகிறார்



திருத்தப்பட்ட புதிய தொழில் சட்டம் ஊடாக தொழில் சங்கம் ஒன்றை அமைப்பதற்கு தேவையான உறுப்பினர்களின் எண்ணிக்கை 100 பேர் வரை அதிகரித்திருப்பதாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

தொழில் சட்டத்தில் மேற்கொள்ளப்போகும் திருத்தங்கள் தொடர்பில் குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் குறிப்பிடுகையில் -

தொழில் சங்கம் ஒன்றை அமைப்பதற்கு தற்போது தேவைப்படும் ஆகக்குறைந்த எண்ணிக்கை 7 பேராகும். இதனை திருத்தியமைத்து தொழில் சங்கம் ஒன்றை அமைப்பதற்கு தேவையான உறுப்பினர்களின் எண்ணிக்கை 100பேர் வரை அதிகரித்திருக்கிறோம்.

இந்த சட்டத்தை அறிமுகப்படுத்தும் சந்தர்ப்பத்தில் நாட்டில் மக்கள் தொகை 5,8 மில்லியனாக இருந்தது. தற்போது நாட்டின் சனத்தொகையை கருத்திற்கொண்டு உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான பிரேரணையை உள்வாங்கி இருக்கிறோம்.

அதேபோன்று புதிய தொழில் சட்டத்துக்கு அமைய தொழிற் சங்கம் ஒன்றின் நிறைவேற்றுக்குழுவுக்கு நூற்றுக்கு 25 வீதம் பெண்கள் பிரதிநிதித்துவத்தை கட்டாயப்படுத்தி இருக்கிறோம்.

மேலும் தொழிற்சங்க போராட்டம் ஒன்றை ஆரம்பிக்க முன்னர் சேவை பெறுநர்களை அது தொடர்பில் அறிவுறுத்துதல், தொழிற்சங்க போராட்டம் ஒன்றை மேற்கொள்ள உறுப்பினர்களின் பெரும்பான்மையானவர்களின் விருப்பத்தை பெற்றுக்கொள்வது கட்டாயமாக்கி சட்டவிதிகளைத் தயாரித்திருக்கிறோம்.

மேலும்சம்பளத்தில்தொழிற்சங்க அங்கத்துவ கட்டணத்தை குறைத்து தொழிற்சங்கங்களுக்கு அனுப்புவதற்கு சேவை வழங்குனருக்கு கட்டாயமாக்குவோம்.

அதன்பிரகாரம்ஊழியர்ஒருவர் கேட்டுக்கொண்டால் தொழிற்சங்க அங்கத்துவகட்டணத்தைசம்பளத்தில் பெற்றுக்கொள்வதை கட்டாயமாக்குவோம். - என்றார். (05)

## பூண்டுலோயாவில் பஸ் கோரவிபத்து

### 26 பேர் காயம்

பூண்டுலோயா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தலவாக்கலை - வட்டகொடையில் இருந்து மடக்கும்புர பகுதியை நோக்கி பயணித்த தனியார் பஸ் ஒன்று துனுகெதெனிய, கிரிடிகெட்டிய பிரதேசத்தில் ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணியளவில் வீதியை விட்டு விலகி சுமார் 50 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளானதில் 26 பேர் காயமடைந்துள்ளனர் என பூண்டு லோயா பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து இடம்பெற்ற போது பஸ்ஸில் சுமார் 26 பேர் பயணித்துள்ளதுடன், இதில் காயமடைந்த 21 பேர் கொத்மலை பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதனையடுத்துஅதிலிருந்து மேலதிக சிகிச்சைக்காக 6 பேர் கம்பளை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

ஏனையோர்பூண்டுலோயா மல்தெனியவைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் எனப்பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பூண்டுலோயாவேவஹேன பிரதேசத்தில் இருந்து வட்டகொட தோட்டத்துக்கு பணிபுரிய சென்றவர்களே இவ்வாறு பணியை முடித்துக்கொண்டு மீண்டும் பஸ்ஸில் வீடு திரும்பியபோதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. விபத்தில்பஸ் பலத்த சேதமடைந்துள்ளதுடன், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பூண்டுலோயா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மீனவர் பிரச்சினை மீது கரிசனை அவசியமே!

அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இந்தியா பயணப்பட இருக்கும் நிலையில் இந்திய மீனவர்கள் பிரச்சினை தொடர்பான விவகாரம் யாழ்ப்பாணத்தில் பதற்ற நிலையை நோக்கி நகர்வதாகப்படுகின்றது. தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் அரசமைப்பின் 13ஆவது திருத்தம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டபோதும் தமது பிரச்சினை தொடர்பில் ஆராயப்படவில்லை என்று மீனவர் பிரதிநிதிகள் கண்டனம் தெரிவித்துள்ளனர். அத்தோடு அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் இணைந்து எல்லை தாண்டி வரும் இந்திய இழுவைப் படகுகளின் பிரச்சினைக்குத் தீர்வு காணும்படி இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடிக்கும் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் அழுத்தம் கொடுக்கவேண்டும் என்றும் மீனவர்கள் வலியுறுத்தி வருகின்றார்கள்.

இந்தியாவில் ஒவ்வொரு வருடமும் 60 நாட்கள் மீன்பிடித் தடைக் காலமாக அறிவிக்கப்படுகின்றது. இந்தக் காலப் பகுதியில் மீனவர்கள் பெரும் படகுகளில் கடலுக்குச் சென்று மீன்பிடிக்க முடியாது. குறிப்பாக இழுவை மடிப் படகுகள் இந்தக் காலப் பகுதியில் தொழிலில் ஈடுபடமுடியாது. மீன்களின் இனப்பெருக்க காலத்தில் இந்தத் தடை நடைமுறைப்படுத்தப்படுவதாக இந்திய அதிகாரிகள் கூறுகின்றார்கள். முன்னர் 45 நாட்களாக இருந்த இந்தத் தடைக் காலம் சில ஆண்டுகளுக்கு முன்பிருந்து 60 நாட்களாக அதிகரிக்கப்பட்டிருக்கின்றது.

கடந்த இரு மாதங்களாக இந்தத் தடைக் காலம் இந்தியாவில் நடைமுறையில் இருந்ததால் இந்த இழுவை மடிப் படகுகளின் பிரச்சினை இலங்கைக் கடலில் இருக்கவில்லை. தடைக் காலம் முடிந்து இப்போது மீண்டும் அவர்கள் மீன்பிடிக்கத் தொடங்கிவிட்டதால் எல்லை தாண்டும் பிரச்சினை மீண்டும் தொடங்கியுள்ளது. கைதுகளும் தொடங்கியுள்ளன. அண்மையில் இரு படகுகளுடன் 15 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

போர் முடிந்த பின்னரான காலத்திலிருந்து அதிகரித்து வந்த இந்தப் பிரச்சினை இப்போது விஸ்வரூபம் எடுத்துள்ளது. போர்க் காலத்தில் கடற்படைக் கண்காணிப்பு இறுக்கமாக இருந்தமை, தமிழ் மீனவர்கள் நீண்ட தூரம் சென்று தொழில் செய்ய அனுமதிக்கப்படாமை ஆகிய காரணங்களால் இந்தப் பிரச்சினை பெரியளவில் இருக்கவில்லை. ஆனால் போர் முடிந்த பின்னர் கடற்படைக் கண்காணிப்பில் ஏற்பட்ட வீழ்ச்சி, வடக்கு மீனவர்கள் நீண்ட தூரம் சென்று மீன்பிடிக்க ஏற்பட்டுள்ள வசதி என்பன பிரச்சினையை அதிகப்படுத்துகின்றன. அதுமட்டுமின்றி போர்க் காலத்தில் இருந்த இந்திய இழுவைப் படகுகளின் அளவும் தற்போது பெரிதாகிவிட்டது. அதனால் அவற்றின் மீன் தேவைக்காக அவை அத்துமீறுவதும் அதிகரித்துள்ளது.

இந்தப் பிரச்சினை நீண்ட காலமாக இருந்து வந்தாலும் இதனைத் தீர்ப்பதற்கான பேச்சுக்களில் இரு நாட்டு அரசுகளும் ஈடுபட்டு வந்தாலும் இதுவரை எந்தத் தீர்வும் கிட்டவில்லை. இதனை அடுத்து, அத்துமீறும் மீனவர்களின் படகுகளைப் பறிமுதல் செய்வது உள்ளிட்ட சட்ட நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டிருக்கின்றன. அப்படியிருந்தும் அத்துமீறல் தொடர்ந்துகொண்டே இருக்கின்றது. அதனால் வடக்குத் தமிழ் மீனவர்களுக்கு ஏற்படும் பாதிப்பும் தொடர்ந்துகொண்டே இருக்கின்றது. இந்திய இழுவைப் படகுகள் கடலுக்கு வந்தால் வடக்கு மீனவர்கள் தொழில் செய்வதற்குக் கடலுக்குச் செல்லாமல் ஒதுங்கிவிடுமளவிற்கு பிரச்சினையின் பூதாகாரம் உள்ளது.

இதற்குத் தீர்வாக இந்திய மீனவர்களின் நாட்டுப் படகுகளுக்கு அனுமதிவழங்குவது பற்றிப் பரிசீலிக்கப்படுவதாகச் சில மாதங்களுக்கு முன்னர் அயலுறவுத்துறை அமைச்சர் அலி சப்ரி நாடாளுமன்றத்தில் அறிவித்திருந்தார். அதற்கு வடக்கில் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. இந்திய நாட்டுப் படகுகள் என்பவை வடக்கில் தமிழ் மீனவர்கள் வைத்துள்ள இழுவைப் படகுகளைவிடவும் மிகப் பெரியவை. இழுவை மடிக்கான வசதிகளையும் கொண்டிருக்கக்கூடியவை. எனவே அவற்றை அனுமதிப்பதும் இழுவைப் படகுகளை அனுமதிப்பதும் வேறு வேறானவை இல்லை என்பதால் அந்த யோசனையையே வடக்கு மீனவர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் அடியோடு நிராகரித்திருந்தனர்.

இந்தப் பின்னணியிலேயே இப்போது, அரசுத் தலைவரின் இந்தியப் பயணத்தையொட்டி மீண்டும் பதற்றம் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. இது தொடர்வதற்கு அனுமதிக்கக்கூடாது. பிரச்சினை தீர்க்கப்படவேண்டும். மீனவர்களின் கரிசனைகளுக்குச் செவி சாய்க்கப்படவேண்டும். தமது பிரச்சினை தொடர்பில் அரசியல் கட்சிகள் அக்கறைப்படவில்லை என்ற அவர்களின் வருத்தம் நியாயமானது. அதனைக் கட்சிகள் கவனத்தில் எடுக்கவேண்டும். அமைச்சர் உள்ளிட்ட அரச தரப்பும் தமிழர் தரப்பும் இது விடயத்தில் இனியும் அரசியல் விளையாட்டுக்களில் ஈடுபடுவதை விடுத்து, இந்தப் பிரச்சினை தொடர்பில் தெளிவான ஒரு நிலைப்பாட்டை – ஒட்டுமொத்த நிலைப்பாட்டை – வழுவாத நிலைப்பாட்டை – எடுப்பது கட்டாயமாகி இருக்கின்றது.

மீனவர்களின் நலன்களைப் பாதுகாக்கும் வகையில் இந்தப் பிரச்சினை கையாளப்படுவது அவசியம். அதற்கு மக்கள் பிரதிநிதிகளிடையயே ஒருமித்த கருத்து ஏற்படுவதும் காலத் தேவை.

# இலக்கியத்தில் இணைந்த பனை

## அங்கம் – 3



மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா.

பனையின் மீது தமிழர் பெருங்காதல்கொண்டிருந்திருக்கிறார்கள்.பனை என்பது தமிழர்களின் மரம் என்றே எண்ணி வந்திருக்கிறார்கள். அந்த நினைப்புஅவர்களின்உள்ளத்தில்ஆழப்பதிந்த காரணத்தால் தாங்கள் வசிக் கும் ஊர்களுக்கும்தங்களின்விருப்பத்துக்குரிய பனையினை இணைத்து பெயர் வைத்து மகிழ்ந்திருக்கிறார்கள். அந்த வகையில்த்தான் இங்கு சில ஊர்களின்பெயர்களைப்பார்க்கின்றோம். பனையின்குளம், பனகுடி, பனஞ்சாவடி, பனங்குளம், பனையூர், பனையப்பட்டி, வடக்குப்பனைவடலி,தீய்ந்தபனைப்பட்டி, கலந்தபனை, பனங்காட்டூர், திருப்பனையூர் , பனங்காடு , பொற்பனைக் கோட்டை.

இலக்கியங்களில் காட்டினாலும் தாங்கள் வாழுகின்ற இடங்களிலும் பனையினை விட்டுவிடத் தமிழர்கள் விரும்பவில்லை என்பதையே இந் நிலை காட்டுகிறதல்லவா !

வெய்யில் என்று பாராமல் , மழை என்று பாராமல் ஒற்றைக் காலில் நின்று தவம் செய்து மக்களுக்கு – அவர்களின் வாழ்வில் பல நிலைகளிலும் பனையானது பயனை நல்கியே வந்திருக்கிறது என்பதும் கருத்திருத்த வேண்டியதே.

கிறிஸ்தவ வேதமான பைபிளும் பனையினை வியந்து நிற்கிறது. நீதிமான் பனையைப் போல் செழித்து வளருவான் என்பதும் நோக்கத்தக்கது.

பதநீரைப் பற்றியும் , சுவையான நுங்கு பற்றியும். பனம்பழம் பற்றி யும், கள் பற்றியும் இலக்கியங்கள் காட்டி நிற்பதையும் காணமுடிகிறது. பனை மாறன் என்று பெயரைக் கொண்ட மன்னர்கள் ஈழத்தை ஆண்டார்கள் என்பதையும் அறிய முடிகிறது.நுங்கின் நீரும், கரும்பின் சாறும், இளநீரும் அருந்தி ஆனந்தம் அடைந்தார்கள் பெண்கள் என்று ஆலத்தூர் கிழார் என்னும்புலவர்பாடுகிறார்.நலங்கிள்ளை என்னும் அரசனின் படை மிகவும் பாரியது. அப்படையின் முன்னணியினர் பனையின் நுங்கினைச் சுவைத்து மகிழ்கிறார்கள். நடுவில் செல்லும் படையணியினர் பனம் பழத்தை உண்டு மகிழ்கிறார்கள். படையணியின் கடைசிப் பகுதியினர் பனங்கிழங்கினை உண்டு பசியாறுகிறார்களாம். அந்த அளவுக்கு படையின் பெருக்கமும், கடந்து செல்லும் காலத்தின் நீட்டமும் காணப்பட்டது என்றும் பனையின் பருவத்தினையும் அதனால் வருகின்ற பயனையும் புறப்பாடல் வாயிலாக ஆலத்தூர் கிழார் காட்டி நிற்பது கருத்திருத்த வேண்டியதே !

வீட்டுக்கு வருகின்ற விருந்தினருக்கு நாம் இப்போது தேனீர் கொடுப்போம். கோப்பி கொடுப்போம். இன்னும் எத்தனையோ வகையான பானங்களைக் கொடுப்போம். அவை அனைத்தும் உடல் நலத்துக்கு உகந்தனவா என்பதை கொடுக்கின்ற நாங்களும் உணர்வதில்லை.பருகுகின்ற விருந்தினரும் உணருவதில்லை. ஆனால் வீட்டுக்கு வருகின்றவர்களுக்கு நுங்கினைக்கொடுத்துஅக்காலத்தில்எம்மக்கள் மகிழ்ந்தார்கள் என்பதை சிறு பாணாற்றுப் படை மூலம் அறிகின்றோம்.

பனையினைப் பலவிதங்களில் பயன்படுத்திய செய்தியினையும் இலக்கியங்கள் புலப்படுத்தி நிற்பதும் நோக்கத்தக்கது.பனையின் ஓலையினால் ஆகிய உண் கலங்கள் பயன்பட்ட விதத்தினை நற்றிணை காட்டுகிறது. தட்டுவம் என்பது பனை ஓலையால் ஆன உண் கலமாகும். பனை ஓலையால் ஆன தட்டுவம் தூய்மையான கலமாகும். இன்று எத்தனை பேருக்கு நினைவில் இருக்கிறதோ தெரியாது ! கள்ளினை அருந்துவதற்கு பனை ஓலையிலான கலம் பயன்பட்டிருக்கிறது. இன்றும் அது நடைமுறையில் கிராமங்களில் இருப்பதையும் காண லாம். பனையின் பன்னாடை கள்ளை வடிப்பதற்கும், பதநீரைவடிப்பதற்கும்துணையாகஇருந்தது என்பதை புறப்பாடல் காட்டி நிற்கிறது.

தென்னம் பிள்ளை என்று செல்லமாய் அழைக்கும் தென்னை யானது வீடுகள் தோறும் இருக்கும். தென்னையைப் பிள்ளையாக்கி செல்லமாய் வளர்ப்போம். நித்தமும் நீர் ஊற்றுவோம். கிட்டத்தட்ட பிள்ளையைப் பேணுவது போலவே தான் தென்னையைப்பேணுவோம். ஆனால் பனையினை அப்படிப் பேணுவதும் இல்லை. அதனை வளர்த்திட நினை ப்பதும் இல்லை. வளர்ந்த பனைகளைப் பார்த்துப் பாராமலும் நிற்போம். யாராவது நல்ல உயரமாய், நல்லகறுப்பாய், நல்லமுறுக்கேறிய உடல் தோற்றத்துடன் காணப்பட்டால் – அவர்களை விபரிப்பதற்கு பனையினை எடுத்துக் காட்டி நிற்போம். பனையோ இதனைஎதையுமேகண்டுகொள்ளாமல் தனது ஒத்துழைப்பினை வழங்கியபடி தலை கவிழாமல் தலை நிமிர்ந்த படியே தளராது நிற்கும். அடியிருந்து நுனிவரை அனைத்தையுமே எங்களுக்கு அளித்து கற்பகதருவாய் , கர்ணனாய் களிப்புற்று நிற்கும். தென்னையும் இவ்வாறு தந்தாலும் பனையின் பக்குவம் வேறு ! பனையின் பயன் பாடும் வேறாகும் ! பனையின் வாழும் காலமும் வேறாகும் !

பிள்ளையென நாமழைக்கும் தென்னையில் ஆண் , பெண் என்று வகை இல்லை. ஆனால் பனையில் ஆண் ,பெண் என்று காணப் படுகிறது. ஆண் பனையினை ‘அழகுப் பனை’ என்றும் , பெண் பனை யினை ’ பருவப்பனை ’ என்றும் அழைக்கின்றனர். பாளையினை மட்டும் நீட்டிக் கொள்ளுவதுடன் ஆண்பனை நின்றுவிடும். நுங்கினை வழங்கிடும் நிலை ஆண்பனைக்கு இல்லை. ஆனால் காய்ப்பதும் கனிதருவதும் பெண்பனைதான். பதநீர் கூட ஆண்பனையைவிடப் பெண்பனையே தந்துநிற்கும். பயிரிடப்படாமல்தானாகவே வளர்ந்து பயனளிக்கும் பனையினை மனமிருத்துவது அவசியமாகும். இளம் பனையினை ‘வடலி ’ என்று அழைக் கின்றோம். பனையானது வளர்வதற்கு பதினைந்து ஆண்டுகள் எடுக்கும் என்று அறியமுடிகிறது. பனையின் வயதானது மனிதனின் சராசரி வயதி லும் கூடியது என்பது மனங்கொள் எத்தக்கதாகும். வளைவுகள் இன்று நேராக வளர்வது பனையின் சிறப்பு எனலாம்.

கற்பகதருவான பனையினைக் கருத்திற்கொண்டு நாட்டுப்புற மக்களின் நாயகனான ஒருவர் தன்னுள்ளத்து உதித்தவற்றை தனது மொழியிலே கவிதையாக்கி வழங்கி இருக்கிறார். பனையின் வரலாற்றையே எப்படிக் காட்டுகிறார் பாருங்கள்.

பனைமரமே! பனைமரமே! ஏன் வளர்ந்தாய் பனைமரமே?
நான் வளர்ந்த காரியத்தை நாட்டாரே! சொல்கிறேன் கேட்பீர்.
அறியாவிட்டால் சொல்லுகிறேன் அச்சோடி
பெண்களா சோபனமே!
தெரியாவிட்டால் சொல்லுகிறேன் தேசமெங்கும் சோபனமே!
பராமரியா யிருக்காமல் பட்சமுடன் கேட்டிருங்கள்.
படுக்கப்பாய் நானாவேன், பாய்முடையத் தோப்பாவேன்,
வெட்டநல்ல விறகாவேன், வீடுகட்ட வாரையாவேன்,
பட்டுப்போற பயிர்களுக்குப் பலத்தநல்ல ஏற்றமாவேன்,
அட்டடுக்குப் பெண்களுக்கு அடுப்பெரிய மட்டையாவேன்,
கட்டநல்ல கயிறாவேன், கன்றுகட்டத் தும்பாவேன்,
மட்டமுள்ள உறியாவேன், மாடுகட்டத் தும்பாவேன்,
பசுவணைக்குங் கயிறாவேன், பால்தயிருக்கு உறியாவேன்,
வாரமட்டை நானாவேன், வலிச்சல்களுந் தானாவேன்,
தொட்டிலுக்குக் கயிறாவேன், துள்ளியாட ஊஞ்சலாவேன்,
கிணத்துசலம் மொண்டுவரக் கைத்தாம்புக் கயிறாவேன்,
பலத்தசுமை பாண்டங்கட்குப் புரிமணையுந் தானாவேன்,
ஏழைநல்ல மங்கலிக்கு ஏற்றகா தோலையாவேன்,
மங்கலியப் பெண்களுக்கு மஞ்சள்பெட்டி நானாவேன்,
பாக்கியமுள்ள பெண்களுக்குப் பாக்குப்பெட்டி நானாவேன்,
விர்த்தாப்பியப் பெண்களுக்கு வெற்றிலைப்பெட்டி நானாவேன்,
குணமுள்ள பெண்களுக்குக் குங்குமப்பெட்டி நானாவேன்,
பெரியோர்கள் தோள்மேலே திருப்பக்குடை நானாவேன்,
திருப்புக்கூடைக் குள்ளிருக்குந் திருமண்பெட்டி நானாவேன்,
திருப்பாவை சேவிப்போர்க்குத் திருத்துழாய்ப் பெட்டியாவேன்,
எழுதுகின்ற பிள்ளைகட்கு வண்ணநல்ல தடுக்காவேன்,
ஓதுகின்ற பிள்ளைகட்கு ஓலைத் தடுக்காவேன்,
நனைந்து வருவார்க்கு டம்பக்குடை நானாவேன்,
பசித்து வருவார்க்குப் பனம்பழமும் நானாவேன்,
பாலர் பெரியோர்க்குப் பனம்பதநீர் நானாவேன்,
சித்திரைக் கோடையிலே சிறந்தநல்ல நுங்காவேன்,
காளையர்க்கும் கன்னியர்க்கும் களைதீர்க்கும் விசிறியாவேன்,
கைப்பிள்ளைத் தாய்மார்க்குக் கருப்புக்கட்டி நான்தருவேன்,
வேலிகட்டக் கயிறாவேன் விறகுகட்ட நாராவேன்,
வருடத்துக் கோர்தினத்தில் சரசுவதி பூசைசெய்து
ஆமெழுகிக் கோலமிட்டு அச்சோடி பெண்களா சோபனமே!
மணையலம்பிக் கோலமிட்டு மணைநிறைய புராணம்வைத்து
பூவும் புதுமலரும் பொன்னாகும் அட்சதையும்
அட்சதையு மலரெடுத்து அர்ச்சிப்பார் உலகமெல்லாம்,
வித்தாரமாய் இரண்டாநாள் விசயதசமி என்றுசொல்லி,
நாட்டிலுள்ள பிள்ளைகட்கு நாள்பார்த்து முகூர்த்தமிட்டு,
எண்ணெய் தேய்த்து நீராட்டி இயல்புடனே அலங்கரித்து,
மாலைபோட்டு சந்தனம்பூசி மடிநிறைய புத்தகம் வைத்துப்
பசங்கள் படித்துவர மங்களங்கள் பாடிவரக்
காம்பு நறுக்கியவர் கணுக்காம்பு வேரறுத்துப்
பக்கமிரு புறம்வாரிப் பல்வரிசைக் காம்பரிந்து
என்னைத் திருத்தியவர் எழுத்தாணி கைபிடித்து,
வெள்ளிநெட் டெழுத்தாணி வேடிக்கை யாய்ப்பிடித்து,
ஆரியரும் வேதியரும் அரிநமோ வென்றெழுதி,
அரிஅரி என்றெழுதி அர்ச்சிப்பார் என்னையவர்,
அரிச்சுவடி என்னாலே, அடுக்காய்ப் பாடம் என்னாலே,
எண்சுவடி என்னாலே, குழிமாற்றும் என்னாலே,
தர்க்கங்கள் என்னாலே, சாத்திரங்கள் என்னாலே,
இராமாயணம் என்னாலே, பாரதமும் என்னாலே,
பாகவதம் என்னாலே, பல்சாத்திரங்கள் என்னாலே,
திருவாய்மொழி என்னாலே, திவ்வியப்பிரபந்தம் என்னாலே,
நாலுவேதம் என்னாலே, ஆறுசாத்திரம் என்னாலே,
கங்கைக்கும் இலங்கைக்கும் கீர்த்திமிகப் பெற்றிருப்பேன்,
மங்கையர்க்கும் மன்னவர்க்கும் மனமறிவதும் என்னாலே,
வர்த்தகரும் செட்டிகளும் வழியறிவதும் என்னாலே,
கணக்கர்களும் முதலிகளும் கணக்கறிவதும் என்னாலே,
பலசரக்கு மண்டிகளில் பத்திரமாய் நானிருப்பேன்,
காசுக்கடை சவுளிக்கடையில் கருத்துடனே நானிருப்பேன்,
கொடுக்கல் வாங்கல் உள்ளவர்க்குக் குறிப்புச்
சொல்லி வாங்கி வைப்பேன்,
கார்த்திகை மாதத்திலே கருத்தறிந்த பிள்ளைகட்குத்
திருத்தமுள்ள மாபலியாய்த் தெருவெங்குஞ் சுற்றிடுவேன்,
பட்சமுள்ள வாசலுக்குப் பட்டோலை நானாவேன்,
காதத்துப் பெண்களுக்குக் காதோலை நானாவேன்,
தூரத்துப் பெண்களுக்குத் தூதோலை நானாவேன்,
கலியாண வாசலுக்குக் கட்டோலை நானாவேன்,
சீமந்த வாசலுக்குச் சீருடனே நான்போவேன்,
பிள்ளை பிறந்ததென்றால் பெருமையுடன் நான்போவேன்,
மைந்தன் பிறந்ததென்றால் மகிழ்ச்சியுடன் நான்போவேன்,
அரண்மனையில் நானிருப்பேன், ஆஸ்தானத்தில் நானிருப்பேன்,
மச்சுள்ளே நானிருப்பேன், மாளிகையில் நானிருப்பேன்,
குச்சுள்ளே நானிருப்பேன், குடிசைக்குள் நானிருப்பேன்,
எருமுட்டை குதிரையெல்லாம் ஏந்திக்கொண்டு நானிருப்பேன்,
ஏரிக்கரை மேலேநான் எந்நாளும் வீற்றிருப்பேன்,
எமலோகம் போனாலும் எல்லவர்க்குந் தெரியவைப்பேன்,
சிவலோகம் போனவர்க்குச் சீட்டோலை யாயிருப்பேன்,
சகலமான காரியத்துக்கும் சாக்கிரதை யாயிருப்பேன்,
இத்தனைக்கும் உதவியென்று என்னைஅயன் சிருட்டித்தான்,
கற்பக விருட்சமெனக்கு எல்லையுந்தான் மறந்தேன்,
திருப்பாளை ஊர்தன்னிற் சிவன்புனைந்தான் என்நாமம்,
நான்வளர்ந்த சேதிதனை நலமுடனே கேட்டவரும்,
பாடிப் படித்தவரும் பட்சமுடன் கேட்டவரும்,
சொல்லிப் படித்தவரும் சுகிர்தமுடன் கேட்டவரும்,
எல்லை உலகளந்த எம்பெருமான் கோத்திரம்போல்,
ஆல்போலே தழைத்து ஆதிசிவன் போல்வாழ்வார்,
ஊழியூழி காலமட்டும் உலகுதனி லேயிருந்து,
வாழிவாழி என்றுசொல்லி வரமளித்தார் ஈஸ்வரனும்.


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Kothu Rotty With Vegitable
In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml
Milk Drink
Pepsi M
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# 1,550 கிலோ நிறையுடைய வாகனத்தை தாடியால் இழுத்து 59 வயது நபர் அசத்தல்






1,550 கிலோ எடை கொண்ட வாகனத்தை தனது தாடியினால் 7நிமிடம் 48செக்கன்களில் 400 மீற்றர் தூரம் இழுத்து 59 வயது நபர் சாதனை படைத்துள்ளார். சோழன் உலக சாதனைப் புத்தகத்தில் இது பதியப்பட்டுள்ளது.

தென்மராட்சி மட்டுவிலைச் சேர்ந்த செ.திருச்செல்வமே இந்தச் சாதனையைப் புரிந்தார்.

சோழன் உலக சாதனைப் புத்தக நிறுவனத்தின் ஏற்பாட்டில் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் மட்டுவிலில் இடம்பெற்ற உலக சாதனை நிகழ்வில் பிரதம விருந்தினராக வரத்தகர் அ.கிருபாகரன் கலந்துகொண்டு சாதனை நிகழ்வினை தொடக்கி வைத்திருந்தார்.

நிகழ்வில் சிறப்பு அதிதிகளாக கலாநிதி அகிலன் முத்துக்குமாரசாமி,,ஈ.சிற்றி ஆங்கிலக் கல்லூரியைச் சேர்ந்த றஜீபன் ஆகியோரும், கௌரவ அதிதிகளாக பன்னாட்டு எம்.ஜி.ஆர் பேரவைத் தலைவர் ம.விஜயகாந்த்,முன்னாள் பிரதேசசபை உறுப்பினர் தி.தங்கவேலு,ஊடகவியலாளர் முகுந்தன் ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர்.

சோழன் உலக சாதனை புத்தக நிறுவன இலங்கை கிளை தலைவர் யோ.யூட் நிமலன்,சந்திரபுரம் கிராம அலுவலர் சுபாசன் ஆகியோரும் நிகழ்வில் கலந்துகொண்டு திருச்செல்வத்தின் சாதனையை அங்கீகரித்து அவருக்குப் பட்டயமும் பதக்கமும் பரிசளித்தனர்.

# சுகாதாரத்துறை நெருக்கடிக்குள் சிக்கியுள்ளது அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

நாட்டின் சுகாதாரத்துறை நெருக்கடிக்குள் சிக்குண்டுள்ளது. சுகாதாரத்துறையில் 5 பாரிய பிரச்சினைகள் எழுந்துள்ளன. மேலும், இந்தப் பிரச்சினைகளுக்கு உடனடியாக தீர்வு காணப்பட வேண்டும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ஹரித அளுத்கே தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

சுகாதாரத்துறையில் 5 பாரிய பிரச்சினைகள் எழுந்துள்ளன. மருந்து தட்டுப்பாடு இதிலுள்ள முக்கியமான பிரச்சினையாகும். மறுபுறம் மருந்தின் தரம் தொடர்பில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. பதிவு செய்யப்படாத மருந்துகளை நாட்டுக்கு கொண்டு வந்துள்ளமையால் பிரச்சினைகள் எழுந்துள்ளது.

மேலும், விலைமனு செயற்பாடுகள் உரிய முறையில் இடம்பெறுவதில்லை. அவ்வாறு உரிய முறையில் விலைமனு மேற்கொள்ளப்படாமல் மருந்துகளை கொள்வனவு செய்துள்ளமையால் மருந்தின் தரம் தொடர்பில் பிரச்சினைகள் எழுந்துள்ளன.

இதேவேளை ரூபாவின் பெறுமதி அதிகரிக்கும்போது அதன் பிரதிபலன்கள் மக்களுக்கு வழங்கப்பட வேண்டும். இருப்பினும், அவை மக்களை சென்றடைவதில்லை. மனித வளம் தொடர்பிலான பிரச்சினைகள் நான்காவது பிரச்சினையாகும்.

விசேட வைத்திய நிபுணர்கள் நாளுக்கு நாள் நாட்டை விட்டு வெளியேறுகின்றனர். புதிதாக நியமனம் பெறும் வைத்தியர்கள் கூட நாட்டை விட்டு வெளியேறுகின்றனர். அத்துடன் வைத்தியசாலைகளில் வைத்திய இயந்திரங்கள் செயற்படுவதில்லை.

சுகாதார அமைச்சர் கூறும் விடயங்கள் கேலிக்கையான விடயங்களாக மாறியுள்ளன.- என்றார். (05)

# குறைந்த வருமான குடும்பங்களின் வாழ்க்கைத் தர உயர்வுக்கு ஆடுகள்

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கில் ஆடுகளை விநியோகிக்கும் வேலைத்திட்டத்தை விவசாய அமைச்சு ஆரம்பித்துள்ளது.

அதன்படி, ஐந்து வருடங்களில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு 70 ஆயிரம் ஆடுகள் விநியோகிக்கப்படும் என அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன் முதற்கட்டமாக, ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் 10 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொரு குடும்பத்துக்கும் மூன்று ஆடுகள் பகிர்ந்தளிக்கப்படவுள்ளன என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது. (05)

# காணிக்கு குருநாதன் நூல் நேற்று வெளியீடு




(பாறுக் ஷிஹான்)

எம்.ஆர்.எம் றஜாய் எழுதிய காணிக்கு குருநாதன் எனும் நூல் வெளியீடும் கௌரவிப்பும் கிழக்கு மாகாண குடியேற்ற உத்தியோகத்தர் தொழிற்சங்கம் ஏற்பாட்டில் ஞாயிற்றுக்கிழமை மாலை கல்முனை கிருஸ்டா இல்ல மண்டபத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் நூலின் கதாநாயகன், முன்னாள் உதவிக் காணி ஆணையாளர் கே.குருநாதன் வாழ்த்தி கௌரவிக்கப்பட்டதுடன் பல்வேறு நிகழ்வுகளும் சிறப்பாக அரங்கேறின.

அம்பாறை மாவட்ட தலைமைப்பீட காணி உத்தியோகத்தர் கே.எம் முஸம்மில் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றதுடன் அம்பாறை மாவட்ட மேலதிகச் செயலர் வி.ஜெகதீசன் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார்.

இந்நிகழ்வில் கல்முனை ,சாய்ந்தமருது, நிந்தவூர், சம்மாந்துறை ,பொத்துவில், லகுகல, பிரதேசசெயலாளர்கள், உட்பட கிழக்குமாகாண பேரவை உதவி செயலாளர் எம்.சி அன்சார், முன்னாள் உதவி காணி ஆணையாளர் கே.குருநாதனின் உறவினர்கள், நண்பர்கள் ,என பலரும் கலந்து கொண்டனர்.

## மேல்கொத்மலை நீர்த்தேக்கத்திலிருந்து பெண்ணின் சடலம் மீட்பு!

நீர்த்தேக்கத்தில் இருந்து பெண்ணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தலவாக்கலை, மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தில் இருந்து குறித்த பெண்ணின் சடலம் நேற்று முற்பகல் 11மணியளவில் மீட்கப்பட்டுள்ளது.

60 வயது மதிக்கதக்க பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அவரின் பெயர், ஊர் தொடர்பான உரிய தகவல்கள் இன்னும் கண்டறியப்படவில்லை.

இறந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது என்று தெரிவித்த தலவாக்கலைப் பொலிஸார், இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (02)

# யாழ். மாவட்டத்தில் தனியார் கல்வி நிலையங்களை வெள்ளி, ஞாயிறு மூடும் முடிவில் மாற்றமேதுமில்லை

## மாவட்டச் செயலர் தெரிவிப்பு



யாழ்ப்பாண மாவட்டத்தில் தனியார் கல்வி நிலையங்களை வெள்ளி மற்றும் ஞாயிறு தினங்களில் மூடுவது பற்றிய தீர்மானத்தில் மாற்றம் எதுவும் செய்யப்படவில்லை எனவும் இது தொடர்பாக எந்த அமைப்பும் தன்னுடன் பேசவில்லை என்றும் யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.

தனியார் கல்வி நிறுவனங்களை ஞாயிற்றுக்கிழமை இயக்குவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டு மாவட்ட செயலாளருடன் கலந்துரையாடப்பட்டதாக தகவல்கள் வெளியான நிலையில் அதனை மறுத்து கருத்துத் தெரிவிக்கும்போதே மாவட்ட செயலாளர் இவ்வாறு தெரிவித்தார்.

தனியார் கல்வி நிறுவனங்களை ஞாயிற்றுக்கிழமை இயக்குவதற்குத் தீர்மானம் எடுக்கப்பட்டு மாவட்ட செயலாளருடன் கலந்துரையாடப்பட்டதாக கூறப்படுவதில் எவ்வித உண்மையும் இல்லை. எந்த அமைப்பும் என்னுடன் இது தொடர்பில் கலந்துரையாடவில்லை. தனியார் கல்வி நிலையம் பற்றிய தீர்மானத்தில் மாற்றம் எதுவும் செய்யப்படவில்லை - என்றார் அவர்.

2023 ஜுன் 9 யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தனியார் கல்வி நிலையங்களை வெள்ளி மற்றும் ஞாயிறு ஆகிய தினங்களில் மூடுவது என்று தீர்மானிக்கப்பட்டது. பாடசாலைக் கல்விக்கு மேலதிகமாக தனியார் கல்வி நிறுவனங்களிலும் பிரத்தியேக கல்வி வகுப்புக்களிலும் வாரத்தில் ஏழு நாட்களும் கல்விச் செயற்பாட்டில் ஈடுபடுவதனால் பிள்ளைகளிற்கும் சமூகத்திற்கும் இடையிலான ஊடாட்டம் அறுந்து போவதாகத் தெரிவித்து வெள்ளி மற்றும் ஞாயிறு தினங்களில் கல்வி நிலையங்களை மூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

தரம் 9 வரையான மாணவர்களுக்கு இந்த இரு தினங்களும் வகுப்புக்களை நடத்தத் தடை என்ற தீர்மானம் ஜுலை மாதம் முதலாம் திகதி முதல் அமுல்படுத்தப்பட்டது.

# விலையுயர்ந்த விதைகள் கவிதை நூல் வெளியீடு



நல்லூர் வடக்கு சந்திரசேகரப்பிள்ளையார் கோவிலடியை சேர்ந்த வே.முத்தையாவின் 100ஆவது அகவை நிறைவு நாளை முன்னிட்டு கவிஞர் கெங்கா ஸ்ரான்லி எழுதிய விலையுயர்ந்த விதைகள் எனும் நூல் வெளியீட்டு விழா நேற்று மாலை நல்லூர் வடக்கு ஸ்ரீசந்திரசேகரப் பிள்ளையார் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

பேராசிரியர் சி.சிவலிங்காராசா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வெளியீட்டு உரையினை , கவிஞர்.ரஜிதா அரிச்சந்திரனும், மதிப்பீட்டுரையினை கவிஞர்.வைவரவநாதன் வசீகரனும் நிகழ்த்தினர்.

ஓய்வு நிலை கிராம உத்தியோகத்தர் சதா கனகலிங்கம் வாழ்த்துரையினை நிகழ்த்தினார். இந்நிகழ்வில் கௌரவ விருந்தினராக வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சீ.வீ.கே சிவஞானமும், சட்டத்தரணி சுதா கஜேந்திரகுமார் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொண்டதுடன் நூலின் முதல் பிரதியை லயன் குமாரசாமி ஜெயந்தன் பெற்றுக்கொண்டார். நிகழ்வின் நிறைவில் நூலாசிரியர் கெங்கா ஸ்டான்லி ஊர் மக்களினால் கௌரவிக்கப்பட்டார்.

# நீண்டகாலமாக சூதாட்டத்தில் ஈடுபட்ட 28 பேர் பொலிஸாரிடம் சிக்கினார்கள்



நீண்ட காலமாகச் சூதாட்டத்தில் ஈடுபட்ட 28 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டம், பெரியநீலாவணை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாண்டிருப்பு இந்து மயானம் அருகில் உள்ள வெற்றுக்காணிகளில் தினமும் பணத்துக்காகச் சட்டவிரோதமாக ஒன்றுகூடி சூதாட்ட நடவடிக்கையில் சிலர் ஈடுபட்டு வருகின்றனர் என்று பொதுமக்களிடம் இருந்து பொலிஸாருக்குத் தகவல் கிடைக்கப்பெற்றிருந்தது.

குறித்த முறைப்பாட்டுக்கமைய பெரிய நீலாவணை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஜே.எஸ்.கே. வீரசிங்கவின் வழி நடத்தலில் பொலிஸார் ஞாயிற்றுக்கிழமை மாலை சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை முன்னெடுத்து 28 சந்தேகநபர்களைக் கைது செய்தனர். சட்டவிரோதமாக ஒன்றுகூடி பல்வேறு சூதாட்டத்தில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டின் கீழ் கைதான அனைவர் மீதும் வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட பின்னர் அவர்கள் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

நாளை மறுதினம் (12) புதன்கிழமை 28 சந்தேகநபர்களுக்கு நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படவுள்ளனர் என்று பெரியநீலாவணை பொலிஸார் தெரிவித்தனர். (02)

காலைக்கதிர் Kalaikkathir

# அதிபர் நியமனங்களில் முறைகேடு அவர்களின் சங்கம் குற்றச்சாட்டு

வடக்கு மாகாண பாடசாலைகளில் நிலவும் அதிபர் வெற்றிடங்களை நிரப்பும் போது நிகழும் முறைகேடுகள் தொடர்பிலும், சில பாடசாலைகளின் அதிபர் வெற்றிடங்களை நிரப்புவதில் காணப்படும் வெளித்தலையீடுகள் தொடர்பிலும் தரம்பெற்ற அதிபர்கள் சங்கம் வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

- இவ்வாறு வடக்கு மாகாணதரம்பெற்றஅதிபர்கள் சங்க இணைப்பாளர் லயன் ரஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த ஊடக அறிக்கையில் மேலும் தெரி விக்கப்பட்டுள்ளவை வருமாறு -

அதிபர்நேர்முகத்தேர்வின் போது காணப்படும் வெளிப்படையற்ற தன்மை, நியமன நிபந்தனைகளை தமக்கேற்றமை போல மாற்றிக் கொள்ளவது தொடர்பிலும் எமது சங்கம் அவதானம் செலுத்தியுள்ளது.

இவ்வாறே வேலணை மத்திய கல்லூரி அதிபர் பதவிக்கான விண்ணப்பம் கோரப்பட்டு நேர்முகத் தேர்வில் தரம் 1 அதிபர் தெரிவு செய்யப்பட்ட பின்னர் மீளவும் விண்ணப்பம் கோரப்பட்டதன் பின்னணி தொடர்பில் எமது சங்கம் வன்மையான கண்டனத்தைத் தெரிவிப்பதுடன் உடனடியாக கோரப்பட்ட விண்ணப்பத்தை இரத்து செய்து ஏற்கனவே விண்ணப்பம் கோரப்பட்டு நடத்தப்பட்ட நேர்முகத் தேர்வின் அடிப்படையில் அதிபரை நியமனம் செய்யுமாறு எமது சங்கம் வலியுறுத்துகிறது.

இது தவறும் பட்சத்தில் தொழிற்சங்க நடவடிக்கைக்கோ அல்லது நீதிமன்ற நடவடிக்கைக்கோ செல்ல எமது சங்கம் தயாராக இருப்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

வடக்கின் கல்வி வீழ்ச்சிக்கான காரணத்தைத் தேடும் நாங்கள் வடக்கின் கல்வி அமைச்சின் செயலாளர் நியமனம் தொடக்கம் பாடசாலை அதிபர் நியமனம் வரை திட்டமிடப்படாத நடவடிக்கைகளும் நியமன முறைகேடுகளும் காரணம் என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

இலங்கையில் அதிகூடிய உறுப்பினர்களைக் கொண்ட எமது சங்கம் இவ்வாறான முறைகேடுகள் தொடர்பில் வன்மையான கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறது. - என்றுள்ளது. (05)

# அம்பாறை மாவட்டத்தின் புதிய செயலர் சிந்தக்க அபேவிக்ரம பொறுப்பேற்றார்



அம்பாறை மாவட்டத்தின் புதிய அரசாங்க அதிபராக சிந்தக்க அபேவிக்ரம திங்கட்கிழமை காலை 10.05 மணிக்கு தனது கடமையைப் பொறுப்பேற்றார்.

இவற்றுக்கப்பால் அரச பணியில் பல உயர்பதவிகளை ஆற்றியுள்ளார்.

இவர் இதற்கு முன்னர் தொகை மதிப்பு புள்ளிவிவரவியல் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகமாக கடமையாற்றியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்தப் பதவியேற்கும் நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் வி.யேகதீஸன், அம்பாறை மாவட்டத்தின் பிரதேச செயலாளர்கள், உதவிப் பிரதேச செயலாளர்கள், மாவட்ட செயலகத்தின் பதவிநிலை உத்தியோகத்தர்கள், ஏனைய உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (05)

# பாதாள உலகக் குழுவின் தலைவன் மத்துகம ஷானின் சகாக்கள் கைது

பாதாள உலகக் குழுத் தலைவன் எனக் கூறப்படும் மத்துகம ஷானின் அறிவுறுத்தலில் செயற்பட்ட இரு பாதாள உலகக் குழு உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களிடமிருந்து மூன்று வாள்கள், 15 கிராம் ஹெரோயின் மற்றும் 5 கையடக்கத் தொலைபேசிகளும் கைப்பற்றப்பட்டனளனகளுத்துறை ஊழல் தடுப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

மத்துகம ஓவிட்டிகல மற்றும் கடவக்க பிரதேசத்தை சேர்ந்த 25 மற்றும் 19 வயதுடைய இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

மத்துகம, ஓவிட்டிகல பகுதியில் உள்ள வீடொன்றில், கொலை செய்யும் நோக்கில் இவர்கள் தங்கியிருப்பதாக கிடைத்த இரகசிய தகவலையடுத்து, பொலிஸார் அந்த வீட்டை சுற்றிவளைத்து சோதனையிட்டுள்ளனர்.

இதன்போது 5 கையடக்கத் தொலைபேசிகளுடன் சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (05)

# குருணாகல் கிம்புல்வானா ஓயாவில் 108 தோட்டாக்களடங்கிய பை மீட்பு

குருணாகல், கும்புல்கெடே கிம்புல்வானா ஓயா வில் பல்வேறு வகையான 108 தோட்டாக்கள் அடங்கிய பை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக கும்புல்கெடே பொலிஸார் தெரிவித்தனர்.

ரி-56 ரக 83 தோட்டாக்கள், எம்16 ரக 29 தோட்டாக்கள், 16 எம்பிஎம்ஜி தோட்டாக்களும் இவற்றில் அடங்குகின்றன.

இந்த தோட்டாக்களை இந்த இடத்தில் விட்டுச் சென்றவர் குறித்து இதுவரை பொலிஸாருக்கு எந்தத் தகவலும் கிடைக்கவில்லை.

கும்புல்கெடே பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் குணதிலக்கவின் பணிப்புரையின் பேரில், குற்றப்புலனாய்வு பிரிவின் பிரதான பொலிஸ் பரிசோதகர் ஜகத் பண்டார உள்ளிட்ட பொலிஸ்குழுவினர் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (05)



# புத்தல நகரில் மழையுடன் விழுந்தன ஐஸ் கட்டிகள்

புத்தல நகரில் பெய்த கடும் மழையுடன் ஐஸ் கட்டிகளும் விழுந்தன என அந்தப் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

அவ்வாறு ஐஸ் கட்டிகள் விழுந்ததை ஞாயிற்றுக்கிழமை மாலை காண முடிந்ததாக அப்பகுதி மக்கள் கூறுகின்றனர்.

மழை பெய்துகொண்டிருந்தபோது புத்தல நகரில் பனிமழை பொழிவதை பார்த்த மக்கள் தமது கையடக்கத் தொலைபேசியில் அதனைப் படம்பிடித்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தாக்கல் செய்த மனு ஜூன் 17 பரிசீலனைக்கு



தன்னை இடமாற்றம் செய்வதற்கு பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு எடுத்த தீர்மானத்தை செல்லுபடியற்ற உத்தரவை பிறப்பிக்குமாறு கோரி பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தாக்கல் செய்த மனுவை எதிர் வரும் ஜூலை 17 ஆம் திகதி பரிசீலிக்குமாறு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பிரியந்த ஜயவர்தன மற்றும் அர்ஜுன ஒபேசேகர ஆகியோர் அடங்கிய உச்ச நீதிமன்ற அமர்வு முன்னிலையில் இந்த மனு திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதனையடுத்தே இது தொடர்பான மனுவை ஜுலை 17 ஆம் திகதி பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள நீதிமன்றம் உத்தரவிட்டது. (05)

# தமிழ்நாட்டு கடந்தொழிலாளர்களின் அத்துமீறலை இந்திய மத்திய, மாநில ஆட்சிகள் தடுக்கவேண்டும்

## அமைச்சர் டக்ளஸ் வலியுறுத்து



இலங்கை கடல் பரப்பில் அத்துமீறல்களில் ஈடுபடுவது தமிழக கடற்றொழிலாளர்களே அன்றி, இலங்கை கடற்படையினர் அல்ல என்று தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இலங்கை கடற்றொழிலாளர்களுக்கு பாதிப்புக்களை ஏற்படுத்தும் இந்தியக் கடற்றொழிலாளர்களின் அத்துமீறல்கள் தொடர்பாக வடக்கு கிழக்கின் சக நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழக தலைவர்களுக்கும் - மக்களுக்கும் தெளிவுபடுத்த முன்வர வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

நெடுந்தீவு கடற்பரப்பினுள் அத்துமீறி எல்லை தாண்டி சட்ட விரோத தொழில் முறையான இழுவைமடித் தொழிலை மேற்கொண்டிருந்த நிலையில், 15 தமிழக கடற்றொழிலாளர்களும் இரண்டு மீன்பிடிப் படகுகளும் அதிகாலை இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக தமிழக ஊடகங்களில் வெளியாகி வருகின்ற செய்திகள் தொடர்பாக அவதானம் செலுத்தியுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இலங்கை கடற்படையினர் அத்துமீறல்களில் ஈடுபடுவதாக தமிழக ஊடகங்களில் வெளிவருகின்ற செய்திகள் தவறானவை எனவும், இலங்கை தமிழ் கடற்றொழிலாளர்களின் வற்புறுத்தல்கள் காரணமாகவே எல்லை தாண்டி வருகின்ற இந்திய கடற்றொழிலாளர்கள் கைது செய்யப்படுகின்றனர் எனவும் தெரிவித்துள்ளதுள்ளார்.

மேலும், குறித்த கடற்றொழிலாளர் விவகாரம் தொடர்பாக தெளிவுபடுத்த வேண்டிய தார்மீக கடமையை வடக்கு கிழக்கின் சக நாடாளுமன்ற உறுப்பினர்கள் உடனடியாக முன்னெடுக்க வேண்டும் எனவும், தமிழக கடற்றொழிலாளர்களின் அத்துமீறல்களை கட்டுப்படுத்துவதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை இந்திய மத்திய - மாநில அரசுகள் விரைந்து மேற்கொள்ள வேண்டும் எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இலங்கை கடல் பரப்பில் அத்துமீறல்களில் ஈடுபடுவது தமிழக கடற்றொழிலாளர்களே அன்றி, இலங்கை கடற்படையினர் அல்லர் என்று தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இலங்கை கடற்றொழிலாளர்களுக்கு பாதிப்புக்களை ஏற்படுத்தும் இந்தியக் கடற்றொழிலாளர்களின் அத்துமீறல்கள் தொடர்பாக வடக்கு கிழக்கின் சக நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழக தலைவர்களுக்கும் - மக்களுக்கும் தெளிவுபடுத்த முன்வர வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

நெடுந்தீவு கடற்பரப்பினுள் அத்துமீறி எல்லை தாண்டி சட்ட விரோத தொழில் முறையான இழுவைமடித் தொழிலை மேற்கொண்டிருந்த நிலையில், 15 தமிழக கடற்றொழிலாளர்களும் இரண்டு மீன்பிடிப் படகுகளும் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

இந்தச்சம்பவம் தொடர்பாக தமிழக ஊடகங்களில் வெளியாகி வருகின்ற செய்திகள் தொடர்பாக அவதானம் செலுத்தியுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இலங்கை கடற்படையினர் அத்துமீறல்களில் ஈடுபடுவதாக தமிழக ஊடகங்களில் வெளிவருகின்ற செய்திகள் தவறானவை எனவும், இலங்கை தமிழ் கடற்றொழிலாளர்களின் வற்புறுத்தல்கள் காரணமாகவே எல்லை தாண்டி வருகின்ற இந்திய கடற்றொழிலாளர்கள் கைது செய்ப்படுகின்றனர் எனவும் தெரிவித்துள்ளதுள்ளார். மேலும், குறித்த கடற்றொழிலாளர் விவகாரம் தொடர்பாக தெளிவுபடுத்த வேண்டிய தார்மீக கடமையை வடக்கு கிழக்கின் சக நாடாளுமன்ற உறுப்பினர்கள் உடனடியாக முன்னெடுக்கவேண்டும் எனவும், தமிழக கடற்றொழிலாளர்களின் அத்துமீறல்களைக் கட்டுப்படுத்துவதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை இந்திய மத்திய - மாநில அரசுகள் விரைந்து மேற்கொள்ளவேண்டும் எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். (05)

# கிளிநொச்சி வைத்தியசாலையில் குழந்தைகள் சாவு சுகாதார அமைச்சின் விசாரணைகள் தொடங்கின

கிளிநொச்சி வைத்தியசாலையில் நான்கு குழந்தைகள் உயிரிழந்த சம்பவம் குறித்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தசம்பவம் தொடர்பில் விசாரணை அறிக்கையை கிளிநொச்சி மருத்துவமனையிடமிருந்து கோரியுள்ளதாக சுகாதார அமைச்சின் செயலாளர் ஜனகசந்திரகுப்த தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவங்கள் தொடர்பில் மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளும் நோக்கிலேயே விசாரணைகளை ஆரம்பித்துள்ளன என சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளார். (05)

# தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கு இந்தியா கட்டாயம் பங்களிக்கவேண்டும்

## மலையக மக்களின் பிரச்சினை குறித்து மனோ கடிதம்



இலங்கையிலுள்ள தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கு இந்தியா தனது பங்களிப்பை வழங்க வேண்டியது கட்டாயமாகும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் டில்லி விஜயத்தின்போது, வெறுமனே விருந்தோம்பலை மாத்திரம் வழங்காமல், தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் அவருடன் இந்திய பிரதமர் நரேந்திர மோடி பேச வேண்டும் என்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு மலையக மக்களின் பிரச்சினைகள் தொடர்பிலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் பேசுமாறு வலியுறுத்தி தாமும் கடிதமொன்றை எழுதவுள்ளதாகவும் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

மலையகம் 200 மற்றும் மலையக மக்களின் 200 வருட வரலாற்று நூல் வெளியீட்டு நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை வவுனியா பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு -

இலங்கை தொடர்பில் இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு பெரும் கடமையும், கட்டுப்பாடும் உள்ளது. இலங்கை அரசாங்கத்தில் செல்வாக்கு செலுத்தக்கூடிய நிலையிலும் அவர்கள் காணப்படுகின்றனர்.

எனவே, இலங்கையில் காணப்படும் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கு இந்தியா தனது பங்களிப்பை வழங்க வேண்டியது கட்டாயமாகும். எனவே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் டில்லி விஜயத்தின்போது தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக அவர் பேச வேண்டும்.

வடக்கு, கிழக்கு மக்கள் சார்பில் அங்குள்ள அரசியல் தலைவர்கள் மோடிக்கு கடிதம் எழுதியுள்ளதைப் போன்று மலையக மக்களின் பிரச்சினை தொடர்பில் ஜனாதிபதி ரணிலுடன் பேசுமாறு வலியுறுத்தி நாமும் கடிதம் எழுதுவோம்.

ஊழல் ஒழிப்பு சட்ட மூலம், கடந்த காலங்களில் அரச சொத்துக்களைக் கொள்ளையிட்டவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதாகவும், அவர்களால் கொள்ளையிடப்பட்டு வெளி குநாடுகளில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள சொத்துக்களை மீளநாட்டுக்கு கொண்டு வருவதாகவும் இருக்க வேண்டும். ஆனால், தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள சட்ட மூலத்தில் அவ்வாறு எதுவும் இல்லை. இது அந்த சட்ட மூலத்தில் காணப்படும் குறைபாடாகும். எனவே, நாம் இவ்விடயத்தில் அதிருப்தியுடன் இருக்கின்றோம். கொள்ளையிடப்பட்ட சொத்துக்களை மீளப் பெற்றுக் கொள்வதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழிகாட்ட வேண்டும்.

நாட்டை வங்குரோத்தடையச் செய்தவர்கள் தொடர்பில் இனங்காண்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள குழு உண்மையில் விசாரணைக்குழுவல்ல. அது முட்டாள் குழுவாகும். கோழியைப் பாதுகாக்கும் பொறுப்பு நரியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதைப் போன்று தான் இந்தக் குழுவின் நியமனமும். நாடு வங்குரோத்தடைய பிரதான காரணம் ராஜபக்ஷ அரசாங்கம் என்பது அனைவருக்கும் தெரியும்.

அவ்வாறிருக்கையில், ராஜபக்ஷக்களின் கட்சியின் பொதுச் செயலாளர் தலைமையில் குழுவொன்றை அமைத்து, நாடு வங்குரோத்தடைய யார் காரணம் என வினவினால் அவர் யாரைக் கூறுவார்?

எனவே அக்குழுவில் அங்கத்துவம் வகிக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதிலிருந்து விலக வேண்டும் என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவிடம் கோரிக்கை விடுத்திருக்கின்றேன்.

அவர் அதனை ஏற்றுக்கொண்டிருக்கின்றார். - என்றார். (05)


OKAYA
ELECTRIC VEHICLES
dsl
We lead the way...!
பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை
விட 77% இலாபமான பாவனைக்கு
The inEVitable
Future of Smart Mobility
FAAST-F4
140-160 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
FAAST-F2T
80-85 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
FREEDOM
70-75 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
Rs.550,000/- இருந்து
வண்ணத்தெரிவுகள்:
இந்தியாவில் வேகமாக வளர்ந்து
வரும் மின்சார வாகனம்
2 வருட உத்தரவாதம்
3 இலவச சேவைகள்
conditions apply*
Visit DSL EV Experience Center : # 525, Union Place Colombo 02
Hotline - 070 300 9555

காலைக்கதிர் Kalaikkathir

# இலங்கை சிங்கள பௌத்தருக்கு மாத்திரம் சொந்தமல்ல: வீரசேகர தனது நிலைப்பாட்டை மாற்றியாகவேண்டும்

## மஹிந்தானந்த அளுத்கமகே காட்டம்



இலங்கைசிங்களபௌத்தர்களுக்குமாத்திரம்உரிய நாடல்ல. இது அனைத்து இலங்கை பிரஜைகளுக்கும் சொந்தமானது. எனவே, நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ள வேண்டும்என்பதோடு, அனைத்து இனமக்களுடனும் ஒற்றுமையாக வாழப் பழக வேண்டும் என்றும் முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே வலியுறுத்தினார்.

இலங்கைசிங்களபௌத்தநாடுஎன்பதைமறந்துவிட வேண்டாம் என்று கடந்த வாரம் இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வின்போது சரத் வீரசேகர முல்லைத்தீவு நீதிபதிக்கு எச்சரிக்கை விடுத்திருந்தார். அவரின் இந்த கருத்து நீதித்துறைக்கு பெரும் அச்சுறுத்தல் என்று தமிழ் அரசியல் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், ஞாயிற்றுக்கிழமை ஜனாதிபதி ஊடக மையத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேட ஊடகவியலாளர் மாநாட்டின்போது, சரத் வீரசேர பிரதிநிதித்துவப்படுத்தும் ஆளுங்கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்றஉறுப்பினர்என்றரீதியில்மஹிந்தானந்த அளுத்கமகேவின் நிலைப்பாட்டை வினவியபோதே அவர் இவ்வாறு பதிலளித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் -

ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் வெவ்வேறு நிலைப்பாடுகள் காணப்படுகின்றன. அதற்கமைய ஒரு சில சிங்கள பௌத்த மக்களுக்காக மாத்திரம் பேசி அவர்களின் வாக்குகளை பெற்றுக்கொள்கின்றனர். வேறு சிலர் அடிப்படைவாதத்துக்கு சார்பான கருத்துக்களை முன்வைத்து அவர்களின் வாக்குகளை பெற்று நாடாளுமன்றத்துக்கு தெரிவாகின்றனர்.

இவ்வாறானவர்கள் இலங்கையில் பல்வேறு இனங்களையும், மதங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும்மக்கள்வாழ்கின்றனர் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். எனவே, மக்கள் பிரதிநிதிகள் தேசிய ஒற்றுமைக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும். எனது தொகுதியான நாவலப்பிட்டியில் அனைத்து இன மக்களும் வாழ்கின்றனர். அவர்கள் அனைவருக்கும் நான் தலைமை வகிக்கின்றேன்.

அவ்வாறிருக்கையில், இது சிங்கள பௌத்தர்களுக்கு மாத்திரம் சொந்தமான நாடு எனக் கருதுவது தவறு. அனைத்து இன மக்களுடனும் ஒற்றுமையுடன் வாழ நாம் பழக வேண்டும்.

இலங்கை அனைத்து இன மக்களுக்கும் சொந்தமான நாடாகும். எனவே, சரத் வீரசேகர தெரிவித்த கருத்து அவரது தனிப்பட்ட நிலைப்பாடேயன்றி, அரசாங்கத்தின் நிலைப்பாடு அல்ல. இது தொடர்பில் எவரும் வீணாகக் கலவரமடையத் தேவையில்லை. - என்றார். -(05)

# தமிழ்நாட்டு மீனவர்கள் கைது கோபாலசாமி கண்டனம்



இராமேஸ்வரம் துறைமுக பகுதியிலிருந்து கடந்த சனிக்கிழமை 461 விசைப்படகுகளில் சுமார் 2 ஆயிரத்துக்கும் அதிகமான மீனவர்கள் கடலுக்குச் சென்றனர். இவர்கள் கச்சத்தீவு அருகே இந்திய கடல் பகுதியில்தான் மீன் பிடித்துக்கொண்டிருந்தனர். அவர்களை உடனே விடுவிப்பதற்கு இந்திய அரசு இலங்கையுடன் பேசி நடவடிக்கை எடுக்கவேண்டும்.

-இவ்வாறு தெரிவித்துள்ளார் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

இராமேஸ்வரத்திலிருந்து கிரீன்ஸ் மற்றும் பாலா ஆகியோருக்கு சொந்தமான 2 விசைப்படகுகளும்கடலுக்குச் சென்றிருந்தன.

இந்தப் படகுகளில் கிறிஸ்து (வயது 40), ஆரோக்கிய ராஜ் (வயது 52), ஜெர்மஸ் (வயது 33), ஆரோக்கியம் (வயது 38), ரமேஷ் (வயது 28), ஜெகன் (வயது 40), பிரபு (வயது 36), பிரியன் ரோஸ் (வயது 44), ஜார்ஜ்(வயது30), அந்தோணி (வயது 45), பிரதீபன் (வயது 35), ஈசாக் (வயது 35), ஜான் (வயது 30), ஜனகர் உள்ளிட்ட 15 மீனவர்கள் இருந்தனர்.

அந்த 15 பேரையும் எல்லை தாண்டி இலங்கை கடல் பகுதிக்குள் சென்று மீன்பிடித்ததாகக் கூறி இலங்கைக் கடற்படையினர் கைது செய்திருப்பதும், அவர்கள் சென்ற 2 விசைப்படகுகளையும் பறிமுதல் செய்திருப்பதும் கண்டனத்துக்கு உரியது.

கைது செய்யப்பட்ட 15 பேரும் காங்கேசன் துறைமுகத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்பட உள்ளதாகசெய்திகள் வருகின்றன.

கடந்த ஜீன் மாதம் எல்லை தாண்டி மீன் பிடித்ததாக இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 22 மீனவர்களை நிபந்தனைகளுடன் விடுதலை செய்து இலங்கை நீதிமன்றம் உத்தரவிட்டது.

இனிமேல், எல்லை தாண்டி வந்து மீன் பிடிக்கக்கூடாது,அவ்வாறுமீண்டும் கைதானால்2ஆண்கள்முதல் 3 ஆண்டுகள் வரை சிறை தண்டனை விதிக்கப்படும் என்ற நிபந்தனையுடன் மீனவர்களை விடுதலை செய்யப்பட்டனர்.

தற்போதுமீண்டும்நமது மீனவர்களைஎல்லைதாண்டி வந்தனர் எனப் பொய்யான குற்றம் சாட்டி சிங்களக் கடற்படை கைது செய்து உள்ளதால், நீதிமன்றத்தின் மூலம் சிறைத்தண்டனை அளிக்க இலங்கை அரசு குறியாக இருக்கும்.

எனவே, ஒன்றிய அரசு உடனே தலையிட்டு தமிழ்நாட்டு மீனவர்களை விடுவிக்கஇலங்கைஅரசுக்கு அறிவுறுத்த வேண்டும். -என்று உள்ளது. (05)

# 13ஐ முழுமையாக அமுல்படுத்துவதை பெரமுனவே முடிவில் தீர்மானிக்கும்

## அக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த தெரிவிப்பு

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்துக்கு நான் எதிரானவன். அதுகுறித்து ஜனாதிபதியிடத்திலும் தெரிவித்துள்ளேன். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 13ஐ சமர்ப்பித்தாலும், அதனை முழுமையாக நிறைவேற்றுவதா இல்லையா என்ற தீர்மானம் தம்வசமே காணப்படுவதாக சிறி லங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில், 'ஆரம்பத்தில் அதிகாரப்பகிர்வு , வடக்கு மற்றும் கிழக்கிற்கு காணி மற்றும் பொலிஸ்அதிகாரங்களைவழங்குவதற்கு எதிரான நிலைப்பாட்டையே பொதுஜன பெரமுன கொண்டிருந்தது. தற்போது அந்த நிலைப்பாட்டை பொதுஜன பெரமுன மாற்றிக் கொண்டுள்ளதா?' என வினவிய போதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் -

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சில நிலைப்பாடுகள் தொடர்பில் எமக்கு சிறு அதிருப்திகள் காணப்படுகின்றன. அந்த வகையில் அரசமைப்பின் 13ஆவது திருத்தத்துக்கு நான் எதிரானவன். இது தொடர்பில் நாம் கலந்துரையாடல்களை முன்னெடுத்திருக்கின்றோம். எனினும்ஜனாதிபதி இது தொடர்பில் இறுதி தீர்மானம் எதையும் எடுக்கவில்லை.

நான் இது தொடர்பில் தனிப்பட்டரீதியில் வினவிய போது அதற்கு பதிலளித்த ஜனாதிபதிரணில்விக்ரமசிங்க13ஆவது திருத்தச் சட்டத்தை சமர்ப்பிப்பதை மாத்திரமே தான் செய்யப்போவதாகவும், அதனை நிறைவேற்றுவது தொடர்பிலான தீர்மா னம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கைகளிலேயே உள்ளது எனக் கூறி யுள்ளார்.

13 தொடர்பில் சாதகமான நிலைப்பாட்டைநான்கொண்டிருந்தாலும்,நீங்கள் தான் நிறைவேற்றுபவர்கள் என ஜனாதிபதி என்னிடம் குறிப்பிட்டிருக்கின்றார். அதற்கமைய வடக்கு மற்றும் கிழக்கிற்கு பொலிஸ், காணி அதிகாரங்களை வழங்குவதாயின் நாடாளுமன்றமே அதனை தீர்மானிக்க வேண்டும். நாடாளுமன்றம் என்பது நாமே.

எனவே, இவ்விவகாரத்தில் ஜனாதிபதி மீது குற்றஞ்சுமத்துவது பிரயோசனமற்றது.

13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கான தீர்மானத்தை நிறைவேற்றுவது எமது கைகளிலேயே உள்ளது.

அதற்கான சந்தர்ப்பம் வரும் போது நாடாளுமன்றத்திலுள்ள சகல கட்சிகளுடனும் கலந்துரையாடி இறுதித் தீர்மானம் எடுக்கப்படும். - என்றார். (05)



# பசில் குழுவினரை சுத்தப்படுத்தும் முயற்சியை தோற்கடிக்கவேண்டும்

## சஜித் பிரேமதாஸ திடசங்கற்பம்

தெரிவுக்குழுவின் தவிசாளராக பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் நியமிக்கப்பட்டுள்ள பின்னணியில் இது வெறுமனே பேச்சுக்களுடன் மட்டுப்படுதப்படும்விடயம்என்று எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

எதிர்க்கட்சி ஒன்றியத்தின் வாராந்த செயற்குழுக் கூட்டம் இன்று நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் இடம்பெற்றது.

அதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலையே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

'கடந்த வார நாடாளுமன்ற அமர்வை நோக்கும் போதும் பஸில் ராஜபக்ஷவின் கும்பல் ஊழல் எதிர்ப்பு சட்டமூலத்தை நிறைவேற்ற மேலும் இரு வாரங்களுக்குஇழுத்தடிப்புச் செய்யும் பிரயத்தனத்தை முன்னெடுத்தது.

இருப்பினும் எதிர்க்கட்சியில் எண்ணிக்கை குறைவாககாணப்பட்டாலும் எதிர்க்கட்சியின் முயற்சியால் குறித்த பிரேரணை நிறைவேற்றப்பட்டது.

இதற்கு ஒத்துழைப்பு நல்கிய எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சகலருக்கும் நன்றி.

அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டுள்ள இந்த தெரிவுக்குழுவில் அங்கம் வகிக்கும் சகல எதிர்க்கட்சி உறுப்பினர்களும் அதிலிருந்து விலகி எதிர்க்கட்சியாக நாம் அனைவரும் ஒன்றிணைந்துஎதிர்க்கட்சித் தலைவர் என்ற வகையில் எனது தலைமையில் இந்த பொருளாதார சீரழிவுக்கானகாரணங்களை கண்டறிய எதிர்க்கட்சியின் தெரிவுக்குழுவொன்றை ஸ்தாபித்து இதனை முன்கொண்டு செல்வோம்.

நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும்225 பேருக்கும் இதில் பங்கேற்க அழைப்புவிடுக்கப்படுகின்றது.

நாட்டின் பொருளாதார வங்குரோத்துக்கான காரணங்களை கண்டறியும் அரசாங்கத்தின் தெரிவுக்குழுவிற்கு பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் நியமிக்கப்பட்டமை பிரச்சினைக்குரிய விடயம்.

மொட்டு கட்சியையும் இன்னும் தெளிவாக குறிப்பிடுவதாக இருந்தால் பஸில் ராஜபக்ஷ குழுவினரை சுத்தப்படுத்த எடுக்கும் இந்த முயற்சியை தோற்கடிக்க வேண்டும் -எனஅவர்மேலும் தெரிவித்துள்ளார். (05)

# பிரச்சினைகளுக்குத் தீர்வு கோரி அக்கரைப்பற்றில் ஆர்ப்பாட்டம்

விவசாயிகளின்சமகாலப் பிரச்சினைகளுக்குஉடனடித் தீர்வுகோரி அக்கரைப்பற்று ஆலையடிவேம்பு பிரதேச விவசாய அமைப்புக்கள் இணைந்து நேற்று (திங்கட்கிழமை) மாபெரும் கவனவீர்ப்பு போராட்டமொன்றைமுன்னெடுத்தனர்.

அக்கரைப்பற்று மணிக்கூண்டுக்கோபுரம் முன்பாக ஒன்றிணைந்து பல்வேறு சுலோக அட்டைகளைத் தாங்கி தமது எதிர்ப்பை வெளிப்படுத்திய விவசாயிகள் பேரணியாக அக்கரைப்பற்று கல்முனை பிரதான வீதியூடாக சின்னப்பள்ளிவரை சென்று அங்கிருந்து ஆலையடிவேம்பு பிரதேச செயலகம் வரை சென்றனர். பிரதேச செயலகம் முன்பாகத் தமது எதிர்ப்பை வெளியிட்ட விவசாயிகள் அங்கு வருகை தந்த அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த.கலையரசனிடமும் உதவிப்பிரதேச செயலாளர் ஆர்.சுபாகரிடமும்கோரிக்கை அடங்கிய மகஜர்களையும் கையளித்தனர்.

சிறுபோக அறுவடை ஆரம்பித்துள்ள நிலையில் நெற்செய்கைக்கான உற்பத்தி செலவு அதிகரித்துள்ளதுடன் விளைச்சல் குறைவடைந்தமையால் தாம் பெரும் நஷ்டத்திற்குள்ளாகியுள்ளனர் என விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இந்நிலையில் அரசால் வழங்கப்பட்ட மானியப்பணமும் பணமாக வழங்கப்படாமல் வவுச்சர் மூலமாக வழங்கப்பட்டு கண்துடைப்புமேற்கொள்ளப் பட்டுள்ளதாகசும் குற்றம் சாட்டினர்.

அதேநேரம் நெல்லின் உத்தரவாதக் கொள்வனவு விலையைகிலோஒன்றிற்கு 100 ரூபாவாகவும் காய்ந்த ஈரப்பதனற்ற நெல்லை 120 ரூபா வரை அதிகரித்து விவசாயிகளின் முழு உற்பத்தியையும் அரசு நெற்சந்தைப்படுத்தும் அதிகாரசபைமூலம்கொள்வனவு செய்ய வேண்டும் எனவும் போராட்டத்தின் போது வலியுறுத்தியுள்ளனர்.

இதேநேரம்தனியாரும் உத்தரவாத விலைக்கு நெல்லைக் கொள்வனவு செய்ய வேண்டும் எனவும் மானியபணத்தைபணமாக வழங்கவும்அல்லதுவிவசாயிகள் விரும்பும்உரத்தைக் கொள்வனவுசெய்ய அனுமதிக்க வேண்டும் எனவும் கோரிக்கைவிடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)





# பாலர் பாடசாலை பட்டமளிப்பு விழா

கல்முனையில் கடந்த 18 வருட காலமாக இயங்கி வருகின்ற லீனத் பாலர் பாடசாலை சிறுவர் சிறுமியர்களின் பட்டமளிப்பு விழாவும்,வருடாந்தநிகழ்வும் பாலர் பாடசாலையின் ஸ்தாபகரும் அதிபருமான எஸ்.தஸ்லி உம்மா தலைமையில்கடந்தஞாயிற்றுக்கிழமை மிகவும் நேர்த்தியான முறையில் நடைபெற்றது.

இந்நிகழ்வின்போது பாலர்பாடசாலைச் சிறார்களின் சந்தைப் பொருள்கள் 'சிறுவர் சந்தை' எனும் தொனிப்பொருளில் விற்பனைக்காக பொதுமக்கள் பார்வைக்கு காட்சிப் படுத்தப்பட்டிருந்தன.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கல்முனை மாநகர முன்னாள் பிரதி முதல்வரும், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய ஒருங்கிணைப்புச் செயலாளரும், கல்முனை ரஹ்மத் பவுண்டேஷன் ஸ்தா பகருமான ரஹ்மத் மன்சூரும்,கௌரவஅதிதியாக கல்முனை அஸ்ஸஹ்றா வித்தியாலயத்தின் அதிபர் திருமதிஎம்.எச்.எஸ்.ஆர்.மஜீதியா அவர்களும் கலந்து சிறப்பித்தனர். மேலும்பாலர் பாடசாலையின்ஆசிரியர்கள், பெற்றோர்கள்,ஊர்மக்கள்என பலர் கலந்துகொண்டனர். (05)

# மண்ணம்பிட்டிய பஸ் விபத்து குறித்து அறிக்கை கேட்கிறார் கிழக்கு ஆளுநர்

வடமத்திய மாகாண பொலன்னறுவை - கதுருவெல பகுதியிலிருந்து காத்தான்குடிக்குச் சென்ற பஸ் ஒன்று மண்ணம்பிட்டிய பகுதியில் ஞாயிற்றுக்கிழமை மாலை விபத்திற்குள்ளாகியுள்ளது. கிழக்கு மாகாணத்தைச்சேர்ந்த பயணிகள் அதிகமானோர் பயணித்த இந்த பஸ் பொலன்னறுவை மாவட்டத்தில் விபத்துக்குள்ளாகியுள்ள நிலையில், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், கிழக்கு மாகாண போக்குவரத்து அதிகாரசபை பணிப்பாளரை விபத்து இடம்பெற்ற இடத்துக்கு விரைந்து சென்று, விபத்து குறித்து ஆய்வு மேற்கொண்டு அதுதொடர்பில் அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு பணிப்புரை விடுத்துள்ளார்.

மேலும், விபத்துக்குள்ளானவர்களுக்கு தேவையான அவசர உதவிகளை உடனடியாக வழங்குமாறு கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதனுக்கு ஆளுநர் வலியுறுத்தியுள்ளார்.

விபத்தில்பாதிப்படைந்த மக்களுக்குத்தேவையான உதவிகளைவழங்க மாகாண உள்ளூராட்சி ஆணையாளருக்கும் ஆளுநர் பணிப்புரை விடுத்ததுடன், இந்த விபத்தில்காயமடைந்து வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளவர்களுக்கான சிகிச்சையை விரைவுபடுத்துமாறும்தெரிவித்துள்ள இதேவேளை, விபத்தில் உயிழந்தவர்களின் குடும்பத்துக்குஆழ்ந்தஇரங்கலைத்தெரிவித்ததுடன், விபத்தில் உயிரிழந்தவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திப்பதாகவும் தெரிவித்துள்ளார். (05)





# விளையாட்டு விழா



மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க இளையோர் ஆணைக்குழுவால் ஏற்பாடு செய்யப்பட்ட விளையாட்டுவிழா சனிக்கிழமை மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை மைதானத்தில் வெகு விமரிசையாக இடம்பெற்றது.

குறித்த விளையாட்டு விழாவில் வெற்றி பெற்ற அணிகளுக்கு வெற்றிக்கேடயம் மற்றும் பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு பேரருட் கலாநிதி இம் மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை , குரு முதல்வர் அருட்பணி கிறிஸ்து நாயகம் அடிகளார்,மன்னார் மாவட்ட இளைஞர் ஆணைக்குழுவின் இயக்குநர் அருட்தந்தை ஏ.விக்டர் சூசை அடிகளார் ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# நந்திக்கடல் கடற்கரையும் சுற்றுலா தலங்களில் ஒன்றாக அடையாளம்



நந்திக்கடல் கடற்கரையும் இந்த நாட்டின் கரையோரத்தில் அடையாளம் காணப்பட்ட புதிய சுற்றுலாத் தளங்களில் ஒன்றாக அடையாளம் காணப் பட்டுள் ளது.2009 ஆம் ஆண்டு நடந்த உள்நாட்டுப் போரின் இறுதி யுத்தம் நந்திக்கடல் பகுதியில் இடம்பெற்றிருந்தது. இதில் பல லட்சம் மக்கள் கொத்தணி குண்டுகளுக்கு தோட்டாக்களுக்கும் பலியாகியிருந்தனர்.

இந்நிலையில் நந்திக்கடல் கடற்கரையும் புதிய சுற்றுலாத் தளங்களில் ஒன்றாகஅடையாளம்காணப்பட்டுள்ளது.

கடலோரபாதுகாப்புமற்றும்கடலோர வள மேலாண்மை திணைக்களம் இதுவரை இதுபோன்ற 24 இடங்களை அடையாளம் கண்டுள்ளது.

இதற்கிடையில், கடந்தமேமாதத்தை விட சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரித்துள்ளதாக கூறப்படுகிறது. அதன்படி கடந்த மாதம் ஒரு லட்சத்து 388 சுற்றுலா பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளனர்.

மே மாதத்தில் எண்பத்து மூவாயிரத்து 309 சுற்றுலாப் பயணிகளே நாட்டுக்கு வருகை தந்திருந்தனர் என அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வருடம் இது வரையில் இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை ஆறு லட்சத்து 24 ஆயிரத்து 874 ஆக பதிவாகியுள்ளது. (05)

# பொலிஸ் மா அதிபரை நியமிக்காமை தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாம்

நாட்டில் கொலைகள், போதைப்பொருள் மற்றும் சட்டவிரோத செயல்கள் தற்போது அதிகரித்துள்ளதாகவும் இவற்றைத் தடுக்க வினைதிறனான பொலிஸ் சேவை அவசியம் எனவும்நாடாளுமன்றஉறுப்பினர்பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நேற்று (திங்கட்கிழமை) நாவலையில் உள்ள சுதந்திர மக் கள் காங்கிரஸ் கட்சியின் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

இதேவேளை நேர்மையான, வினைதிறனான பொலிஸ் சேவை அவசியம். குறைந்தது மக்களின் உயிர்களையாவது காப்பாற்ற வேண்டும்.

இவ்வாறான நிலையில், பொலிஸ் மா அதிபர் ஓய்வுபெற்ற போது, புதிய பொலிஸ் மா அதிபரை நியமிக்க முடியாமல் போனமை கவலைக்குரிய விடயம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் பொலிஸ் மா அதிபரை நியமிப்பது தொடர்பில் அரசாங்கத்துக்குள் காணப்படும் முரண்பாடுகள் காரணமாக தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. கூடிய விரைவில் புதிய பொலிஸ் மாஅதிபரைநியமிக்கவேண்டும்என்றும்அவர் குறிப்பிட்டுள்ளார். (05)

# தேங்காய் ஒன்றின் விலை 50 ரூபாவால் குறைகிறது



அடுத்த மாதத்திற்குள் தேங்காய் ஒன்றின் விலை 50 ரூபாவால் குறையலாம் எனத் தென்னை உற்பத்தியாளர் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

எவ்வாறாயினும், இது உள்ளூர் தென்னை கைத்தொழிலைப் பாதிக்கும் எனதென்னைஉற்பத்தியாளர்கள்சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

சந்தையில்தேங்காய்ஒன்றின்விலை 100 ரூபாவைத் தாண் டியுள்ளமை குறிப்பிடத் தக்கது. (05)

# கேள்வி அறிவித்தல் பருத்தித்துறை நகரசபை திருத்தம்

கடந்த 06.07.2023 ஆம் திகதிய காலைக்கதிரில் பிரசுரமாகிய மேற்குறித்த விளம்பரத்தின் 3ஆவது வேலைத்திட்டமான பருத்தித்துறை மீன்சந்தை வளாகத்தில் குளிரூட்டிய அறை (Cool Room) அமைத்தலுக்கான மதிப்பீட்டுத் தொகை 7.02 மில்லியன் என்பதனை 6.50 மில்லியன் எனவும், இதற்கான பிணை வைப்பு ரூபா.70,500.00 இனை ரூபா.65,000.00 எனவும் திருத்தி வாசிக்கவும்.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.07.2023இல் வெளியிடப்பெற்றது.